Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆடி 19 ஆம் நாள் ஸபர் 20 (3-8-61) | வியாழக்கிழமை | தபாற் பெட்டி எண்: 49 | இதழ் 146

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொனரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

அடுத்த வாரம்

# விலைகட்டுப்பாடுசட்டம்

## வர்த்தகமந்திரிக்கு விசேஷ அதிகாரம்

### தொழிற் சங்கங்களுக்கு வேண்டுகோள்

கொழும்பு, புதன்

**உணவு, வர்த்தக, கப்பல், போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன கட்டுப்பாட்டு விலை சம்பந்தமான திருத்த மசோதா ஒன்றை அடுத்த வாரம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கவிருக்கிறார்.**

விலை உயர்வுக்கான அறிகுறிகள் காணப்படும் எந்த ஒரு பொருளுக்கும் ஒரு குறித்த விலையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை இம்மசோதா மந்திரிக்கு அளிக்கும். தேசிய நலனுக்கு இவ்வித மசோதா தேவைப்படுகிறது என மந்திரி தெரிவித்துள்ளார். இவ்விதம் விலையைக் கூட்டி அதிக லாபமடைய எண்ணுபவர்களிடமிருந்து பொது மக்களைக் காப்பாற்றுவதற்காக தமக்கு இது விஷயத்தில் உதவுமாறு மந்திரி தொழிற் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

## இலங்கை மாணவருக்கு உபகாரச் சம்பளம்

கொழும்பு, புதன்

இலங்கை மாணவர்களுக்கு உயர்தர தொழில் நுட்ப, விஞ்ஞான கல்விக்கான மேலும் பல உபகாரச் சம்பளங்களை வழங்க யூகோஸ்லேவியா முன் வந்திருக்கிறது. இதற்கான தெரிவு சீக்கிரம் நடைபெறும்.

## காருகுறிச்சியின் நாதஸ்வரக்கச்சேரி நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம் வியா.

நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நாதஸ்வர மேதை காருகுறிச்சி பி. அருணாசலத்தின் நாதஸ்வரக் கச்சேரி யாழ்ப்பாணம் (ஆனைப் பந்தியடி) வீரமாகாளி அம்மன் கோவிலில் நடைபெறும். பிரபல தவில் வித்துவான் தட்சணாமூர்த்தியின் கச்சேரியும் நடைபெறும்.

## தார் பூசிய வழக்கில் திரு. ராஜரத்ன வியாழக்கிழமை தண்டனை விதிக்கப்படும்

கொழும்பு, புதன்

தார்பூசும் இயக்க வழக்கில் தண்டனை விதிக்கப்படுவதற்காக திரு. கே. எம். பி. ராஜரத்னவும், மற்றும் 8 பேரும் வருகிறவியாழக்கிழமை பதுளை மாவட்ட நீதிபதிமுன் ஆஜர் செய்யப்படுவார்கள். நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்த வழக்கு சம்பந்தமான தஸ்தாவேஜுகளை அமைச்சின் அதிகாரிகள் பொலிஸ் பந்தோபஸ்துடன் இங்கு கொண்டு வந்தனர்.

## மாக்மில்லன்

லண்டன், ஆக 2

பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் இருதய நோயினல் வருந்துவதாக வெளியான தகவல் அவதூறானது என லண்டன் வட்டாரங்கள் மறுத்தன.

## "வாழ்க்கைக்கு அடிப்படை ஆதாரம்கல்வி"

### சர்வகலாசாலை நூற்றாண்டு திறப்பு விழாவில் டாக்டர் ராதாகிருஷ்ணன்

சென்னை, புதன்

"வாழ்க்கைக்கு அடிப்படையான ஆதாரம் கல்வி. சர்வகலாசாலைகள் எங்களுடைய இளைஞர்களுக்கு இதைச்செய்ய வேண்டும்" என்று சென்னைச் சர்வகலாசாலை நூறுவது ஆண்டு விழாக் கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசிய இந்திய உப ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"நாட்டின் பொதுவான நிலைமை உயர்ந்தால் எலலாமே அபிவிருத்தி அடையும். இதைச் சர்வகலாசாலைகளின் உதவியுடன் செய்யலாம். சர்வ கலாசாலைகள் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களையும், விஞ்ஞானிகளையும், டாக்டர்களையும் உருவாக்க வேண்டும். தொழில் துறை சார்ந்த நாகரிக வளர்ச்சி மட்டும் போதாது மனித நாகரிக வளர்ச்சி அவசியம். இதை நமது சர்வகலாசாலைகள் செய்து வர வேண்டும்.

(5ம் பக்கம் பார்க்க)

## களனி ராஜ மகா விகாரை

கொழும்பு, புதன்

களனி ராஜமகாவிகாரைக்குச் சுற்றுப்புறத்திலுள்ள சாக்கடைகளையும் அனுமதி பெறாத கடைகளையும் மற்றும் தேவையற்றுக் கிடக்கும் பொருள்களையும் அகற்றும்படி சுகாதார இலாகா உள்ளூர் கிராமச்சங்கத்துக்கும் பொது தர்மகர்த்தாவுக்கும் அறிவித்துள்ளது.

## கண்டக்டர் இல்லாத பஸ் சேவை

கொழும்பு, புதன்

ஹெந்தலையிலுள்ள இலங்கை போக்குவரத்துச்சபை டிப்போவிலிருந்து கண்டக்டர் இல்லாத ஒற்றைத்தட்டு பஸ் ஒன்று சேவைக்கு விடப்படும்.

இந்த பஸ்ஸில் கண்டக்டரின் வேலையை சாரதியே செய்வார். அதாவது, சாரதி தன் ஆசனத்திலிருந்தபடியே பஸ் கட்டணத்தை வசூலித்துக் கொண்டு பிரயாணிகளை உள்ளே அனுப்புவார். பல மேல் நாடுகளில் இம்முறை அமுலில் இருக்கிறது.

## யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் 10 தாதிகள்

### இருப்பிட வசதியின்றி திண்டாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடந்த 10ந் திகதி உதவித் தாதிமார்களாக நியமனம் பெற்று வந்திருக்கும் 10 உதவித் தாதிமார்களும் இருப்பிட வசதியில்லாது திண்டாடுவதாகத் தெரிகிறது.

ஆஸ்பத்திரியில் இடமில்லாத காரணத்தால் இவர்கள் அங்கு தங்கமுடியாதிருக்கிறதாம். திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களிலிருந்து வந்திருக்கும் இவர்கள் யாழ்ப்பாணம் பட்டினப் பகுதிக்குள் பிரத்தியேக வீடு அமர்த்த வீடில்லாமையால் வெளியிடங்களிலுள்ள தங்கள் நண்பர்களின் வீடுகளிற் தங்கிவருகிறார்களெனத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக இவர்கள் ஓர் மகஜரை சுகாதாரசேவை டைரக்டருக்கு அனுப்பியுள்ளனர்.

தங்கள் நியமனக் கடிதத்தில் உறுதிசெய்யப்பட்டபடி ஆஸ்பத்திரிக்குள்ளேயே இருப்பிட வசதி செய்து தருமாறும் பெண்களாகிய தாங்கள் தூர இடங்களுக்குப் பிரயாணஞ் செய்ய வேண்டியுள்ளதாயும் இரவுநேரங்களில்போக்குவரவு குறைவாக இருக்கும் யாழ்ப்பாணத்தில் பிரயாணஞ் செய்வதற்குத் கஷ்டமாக இருப்பதாகவும், இதனால் ஆஸ்பத்திரிக்குள்ளேயே இருப்பிடவசதியைச் செய்து தந்து பாதுகாப்பு அளிக்குமாறும் அம்மகஜரில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## 14 கல்விஇலாகா அதிகாரிகள் இவ்வாண்டு விலகுவர்

### கட்டாய ஓய்வு பெறும் விதியின் எதிரொலி

கொழும்பு, புதன்

**55 வயதில் ஓய்வு பெறவேண்டுமென்ற விதியின் கீழ், கல்வி இலாகாவிலுள்ள 14 உயர்தர அதிகாரிகள் இவ்வாண்டுக்கு முன் விலக வேண்டியிருக்கும்.**

கல்வி டைரக்டர் திரு. எஸ். எப். டி' சில்வாவும் அநேக உப, உதவி டைரக்டர்களும், கல்வி மந்திரியின் உதவிக் காரியதரிசியும் இவ்விதம் ஓய்வுபெற வேண்டியவர்களில் சிலராகும்.

இதற்கிடையில் அரசாங்க சேவை ஓய்வு விதிகளைத் திருத்துவதன் மூலம் 55 வயதில் கட்டாயம் ஓய்வு பெறுவதை அமுலாக்கும் சுற்றறிக்கை ஒன்றை அரசாங்கம் வெளியிடும். ஆனால் தொழில் நுட்ப, விஞ்ஞானத் தகுதி பெற்றவர்களை இது பாதிக்காது. 60 வயதுவரை அவர்கள் கடமையாற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

## மண்டபம் வழியாக வரும் இந்தியர் வாரத்திற்கு 600 பேர்

கொழும்பு, புதன்

இந்தியாவிலுள்ள நோய் தடுப்பு முகாம்பற்றி வெளியான ஒரு செய்தியை மறுத்து சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

வாரம் ஒன்றுக்கு இந்தியாவிலிருந்து மண்டபம் முகா வழியாக 20 பேர் வருவதாகக் கூறப்படுவதை இந்த அறிக்கை மறுத்துள்ளது.

இந்த முகாம் வழியாக வருபவர்களின் தொகை இப்போது குறைந்துள்ள போதிலும், வாரா வாரம் 600 பேர் வருகிறார்கள் என்றும் இம்முகாம் 310 ஏக்கர் விஸ்திரணத்தைக் கொண்டதென்றும் அறிக்கை மேலும் கூறுகிறது

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.



## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.



## கேள்வி விளம்பரம்

புலோப்பளைக் கிராமச் சங்க அக்கிராசனரால் கீழ் குறிக்கப் பட்டிருக்கும் ரோட்டு வேலைகளைச் செய்வதற்கு சீல் வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலம் ஆவணி மாதம் 14-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ரூபாய் 10,000க்கு குறையாமல் பதிவு உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் ரெண்டர் பிணையாக ரூபாய் 50-00 கட்டவேண்டும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபாய் 5-00 கட்டவேண்டும். இப்பணம் திருப்பிக்கொடுபட மாட்டாது. கேள்விப்பத்திரங்கள் 12-8-61 பகல் 12 மணி வரையும் வழங்கப்படும்.

வேலையின் விபரங்களை இக் கிராமச்சங்கக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

**வேலையின் விபரம்**

1. முகாவில் ரோட்டு அமைத்தல், 2. மாசார் ரோட்டு அமைத்தல், 3. சென்ற் பேதுறு சேச் ரோட்டு, 4. தர்மக்கேணி தாளையடியில் கிணறு வெட்டிக்கட்டுதல்.

ஏ. ஜி. ராஜசூரியர்
பு. கி. ச. தலைவர்

புலோப்பளைக் கிராமச் சங்கம்,
பளை, 2-8-61.


## 'கசிப்பு' உற்பத்தி

### கிராம மக்களுக்கு ஒரு பிழைப்பு

கம்பஹா, புதன்

"பெருமளவில் 'கசிப்பு' உற்பத்தி செய்யப் படுவதற்குக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டமே. போத்தல் ஒன்று 40 சதவீதம் உற்பத்திசெய்யப் படும் 'கசிப்பு' 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கிராமங்களில் வேலையில்லாமல் திண்டாடும் மக்கள், 'கசிப்பு' உற்பத்தியில் ஈடுபட்டு அதனை அதிக விலையில் விற்கின்றனர்."

இவ்வாறு, மகாத்துவ கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "ரஷ்யாவில், 'வொட்கா' என்ற போதையூட்டும் பானம் மக்களின் நாளாந்த உணவாக உபயோகிக்கப் படுகிறது. இலங்கை மக்களின் உணவூட்டும் பானமாகும். தவிர, சிங்கள மன்னர் காலத்தில் இலங்கை மக்கள் கள்ளை விரும்பிக் குடித்தனர்.

# "இலங்கை வானொலியை கார்ப்பரேஷனுக்கலாம்"

## கல்வி மந்திரி யோசனை

## யாழ்ப்பாணத்தில் ஒரு அஞ்சல் நிலையம் அமைக்கவும் சிபார்சு

கொழும்பு, புதன்

பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் (பி. பி. ஸி.) போன்று இலங்கை வானொலியும் ஒரு கூட்டுஸ்தாபனமாக்கப்படவேண்டுமென்று கல்வி ஒலிபரப்பு மந்திரி ஜனாப் பதியுதீன்மாமூத் அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு அஞ்சல் நிலையமும், காலியில் ஒரு அஞ்சல் நிலையமும் இலங்கை வானொலிக்கு இருக்கவேண்டுமென்று மந்திரி பதியுதீன்மாமூத் அரசாங்துக்குத் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

செங்கடகல என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ள அஞ்சல் நிலையத்தைப்போன்று காலியிலும் யாழ்ப்பாணத்திலும் அஞ்சல் நிலையங்கள் நிறுவப்படாவிட்டால் தென்னிலங்கை மக்களும் யாழ்ப்பாணப் பகுதி மக்களும் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளைக்கேட்க முடியாமலே போகக்கூடும் என்று மந்திரி மாமூத் சுட்டிக் காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

இலங்கை வானொலி நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்தில் தெளிவாகக் கேட்கமுடியாதிருப்பதனாலேயே யாழ்ப்பாண மக்கள் இந்திய வானொலி நிலையங்களின் நிகழ்ச்சிகளைக் கேட்கிறார்களென்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

சக்திவாய்ந்த அஞ்சல்நிலையமொன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டால் இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்புப் பகுதியின் வெளிநாட்டு ஒலிபரப்பின் வருமானத்தை அதிகரிக்கமுடியுமென்றும் மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வானொலிக்கு கணிசமான அளவுநிதி செலவிட முடியாத நிலையில் அரசாங்கம் இருந்தால் இலங்கை வானொலியை ஒரு கூட்டுஸ்தாபனமாக மாற்றுவது நல்லதென்று மந்திரி கூறியுள்ளார்.

## நாவலர் பாடசாலை

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முன்னாள் மனேஜர் திரு. வி. முத்துக்குமாரு 'ஈழநாடு' 24-7-61 இதழில் நாவலர் வித்தியாசாலைக் குரிய பாடசாலை மண்டபத்தை மடாலயம் என்று குறிப்பிட்டிருந்தது தவறென்றும், அது பாடசாலை மண்டபமே யெனவும் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர் சங்கம் தெரிவிக்கின்றது.

## பிச்சைக்காரர்களுக்கு புனர் வாழ்வு

கொழும்பு, புதன்

பிச்சைக்காரர்களுக்கு புனர் வாழ்வளிப்பதற்கென நாட்டின் பல பகுதிகளிலும் பேட்டைகள் அமைக்கப்பட வேண்டுமென்று கலாசார, விவகார, கைத்தொழில், உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்துள்ளார்.

தர்மஸ்தாபனங்கள் நடத்தும் அனாதை விடுதிகளில் இனியும் ஆட்களை எடுத்துப் பராமரிக்க முடியாதென மறுக்கப்படுவதாகக் கூறப்பட்ட புகாரைத் தொடர்ந்தே மந்திரி மைத்திரிபால பிச்சைக்காரர்கள் பேட்டைகள் அமைக்கப் பட வேண்டுமென்று யோசனை கூறியுள்ளார்.

இந்தப் பேட்டைகள் ஒழுங்கான முறையில் நடத்தப்பட்டால் அங்குள்ளவர்களின் பராமரிப்புக்காகப் பணம் கொடுக்க முடியுமென்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

இப்பேட்டைகளில் கோழிப் பண்ணை, கால்நடைப்பண்ணை, விவசாயப்பண்ணைகளை அமைக்கலாமென்றும் பிச்சைக்காரர்களும் அநாதைப் பெண்களும் இப்பண்ணைகளில் வேலை பார்க்கலாமென்றும் மந்திரி யோசனை தெரிவித்துள்ளார்.

மந்திரியின் யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் பரீட்சார்த்தமாக ஆறு பேட்டைகள் முதலில் நிறுவப் படும்.

## சிங்கப்பூர் தொழிற் சங்க காங்கிரஸ் கலைக்கப்பட்டது

சிங்கப்பூர்

தொழிற்சங்க காங்கிரசைக் கலைக்க சிங்கை சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது.

தொழிற்சங்க காங்கிரசின் பொதுக்காரியதரிசி திரு. ஜி. கந்தசாமியின் வேண்டுகோளின் பேரில் தொ. ச. கா. நிதிகளை அதில் இணைந்துள்ள தொழிற் சங்கங்களுக்குப் பிரித்து வழங்குமாறு தொழிற் சங்கப் பதிவு அதிகாரியை அமைச்சர் பர்ன் கேட்டுக் கொண்டார்.

கம்யூனிஸ்டு அல்லாத ஜனநாயக சோஷலிஸ்டு அடிப்படையில் ஒரு தேசிய தொழிற் சங்க ஸ்தாபனத்தை திரு. கந்தசாமியும் அவரது சகாக்களும் அமைப்பாளர்கள் என்றும் திரு. பர்ன் அறிவித்தார்.

தற்போதைய தொழிக்சங்க காங்கிரசைக் கலைக்கு மாறு கேட்டுக்கொண்ட திரு. கந்தசாமி, சிங்கையில் தொழிற் சங்க இயக்கத்தை ஐக்கியப் படுத்தும் இலட்சியம், தொ. ச. கா. வில் உள்ள திரு லிம் சின் சியோங் குழுவினரின் நடவடிக்கைகளால் சிதைந்து விட்டது என்றார்.

இந்த தகராறுகள் சம்பந்தமாக திரு. கந்தசாமிக்கும் அமைச்சர் பர்னுக்குமிடையே கடிதப் போக்கு வரத்துகள் நடைபெற்றன. இக்கடிதங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பப் பட்டன.

தொ. ச. கா. வின் தற்போதைய சட்ட விதிகள் பதிவு செய்யப்படவில்லை என்று திரு. கந்தசாமி தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## ஸ்காட்லாந்து ஆட்சி அமைப்பு

### காங்கிரஸ் கமிட்டி ஆதரவு

ஷில்லாங், ஆக 2

அஸ்ஸாம் மலைஜில்லாப்பகுதிக்கு ஸ்காட்லாந்து முறையான ஆட்சி அமைப்பு ஏற்படுத்தலாமென பிரதமர் நேரு தெரிவித்த யோசனைக்கு மலைஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஆதரவு தெரிவித்துள்ளது. இப்போதைய நிலையில் இந்த ஆட்சிமுறைதான் சிறந்தது என்று காங்கிரஸ் கமிட்டி தெரிவித்துள்ளது. இதுபற்றி சந்தேகங்கள் தோன்றியிருப்பதனால் சந்தேகங்களைத் தெளிவாக்கும் வரை ஸ்காட்லாந்து ஆட்சி அமைப்புத் திட்டத்தை அமுல் செய்யக் கூடாதென்றும் காங்கிரஸ் கமிட்டி தெரிவித்துள்ளது.




## இரவு 10 மணிவரை தவறணைகள் திறந்திருக்கவேண்டும்

### மந்திரிக்கு மாநகரசபை கோரிக்கை

கொழும்பு, புதன்

கொழும்பு நகரின் சாராய விநியோகப் பொறுப்பையும், மாநகரசபையின் எந்தஎல்லையிலும், தவறணைகளைத் திறக்கும் உரிமையையும் இரவு 10மணி வரை தவறணைகளைத் திறந்து வைக்கும் அதிகாரத்தையும் கொழும்பு மாநகரசபைக்கு வழங்கவேண்டும் என்று உள்நாட்டு மந்திரியைக் கேட்பதென்ற திரு. டி. எஸ். மல்லவராச்சியின் பிரேரணையை கொழும்பு மாநகரசபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

பிரேரணை கொண்டு வரும் பொழுது திரு. மல்லவராச்சி பின்வருமாறு கூறினர்:- பெருகிவரும் 'கசிப்பு' உற்பத்தியைத் தடைசெய்ய வேண்டுமானால், சராயத்தைக் குறைந்த விலையில் விற்கவேண்டும். சாராயத்தின் விலையை இன்னும் குறைத்து, ஒரு போத்தல் ரூ. 6-க்கு விற்பனவு செய்யவேண்டும். அத்துடன் கால் போத்தல்களில் சாராயம் கிடைக்கக்கூடிய வசதியையும் செய்யவேண்டும். கொழும்பு நகரில் ஆறு சாராயத் தவறணைகள் மட்டுமே இருக்கின்றன. இத் தவறணைகளும் இரவு 7 மணியுடன் மூடப்படுகின்றன. இவைகள் இரவு 10 மணிவரை திறக்கப்பட வேண்டும்.


எப்பொழுதும் உபயோகியுங்கள்

**டால்மியாஸ்**

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

**செட்டிநாட்**
**காப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்**
116, 118, கெய்சர் வீதி,
கொழும்பு.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# நிலச்சரிவில் ஒரு கிராமமே அழிந்தது; 55 பேர் உயிருடன் புதையுண்டனர்

லக்ஷ்மணபுரி, ஆக 2

உத்தர பிரதேசத்தில் சாமோலி ஜில்லாவில் நிலச்சரிவினுல் ஒரு கிராமமும் அந்தக் கிராம மக்களும் அழிந்துபோயினர்.

12 குடும்பங்கள் மட்டும் வாழ்ந்து வந்த இக்கிராமத்தில் சென்ற சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக சென்ற வெள்ளிக்கிழமை பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 'கிராமத்திலிருந்த ஒரு 7 வயதுச் சிறுமி மட்டும் உயிர் தப்பினுள். மொத்தம் 55 பேர் மாண்டிருக்கக் கூடுமென்று அஞ்சப்படுகிறது. வெள்ளம் காரணமாக மண் சரிவில் புதையுண்ட சடலங்கள் தேடிக் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது. இரண்டொரு சடலங்களை மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன. நிலச்சரிவு ஏற்பட்ட சமயத்தில் வெளியூர் சென்றிருந்த அக்கிராமத்தைச் சேர்ந்த பத்துப் பேரும் உயிர்தப்பிய சிறுமியும்தான் உயிருடனிருக்கும் அக்கிராம வாசிகள். இக்கிராமம் கேதாரி நாத்பாதையில் உள்ளது.

பிஸர்ட்டா—

# "ஐ. நா. சபையின் அவசர கூட்டம் அவசியமில்லை"

## அமெரிக்க பிரதிநிதி கருத்து

நியுயோர்க், ஆக. 2

பிஸர்ட்டா நிலைமை சம்பந்தமாக விவாதிக்க ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம் நடைபெற வேண்டும் என்று கோரிய ஐ. நா.விலுள்ள ஆசிய ஆபிரிக்கக் குழுவினர் தங்கள் கோரிக்கைக்கு ஆதரவாக அங்கத்துவ நாடுகளின் கையெழுத்துக்களைச் சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

99 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பொதுச் சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமானுல் 60 அங்கத்துவ நாடுகளின் சம்மதம் கிடைக்க வேண்டும். நேற்று பிற்பகல் ஒரு மணி வரை 28 நாடுகளின் கையெழுத்துச் சேர்க்கப்பட்டன.

போதிய நாடுகளின் கையெழுத்துக்கள் கிடைத்து விடுமென ஆசிய ஆபிரிக்க குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது. 60 நாடுகளின் கையெழுத்துக்கள் கிடைத்துவிட்டால் ஐ நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம் நாளை வியாழக்கிழமை கூடும்.

### அமெரிக்கா விரும்பவில்லை

'பிஸர்ட்டா' நிலைமைக்கு ஒரு தீர்வு காணபதற்கு ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம் நடைபெற வேண்டிய அவசியமில்லையென்று ஐ. நா. வில் அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதியான திரு அட்லாஸ் ஸ்டீவன்சன் தெரிவித்தார்.

'பிஸர்ட்டா' சம்பந்தமாக அமெரிக்காவின் அதிகாரபூர்வமான கருத்து வெளியானது இதுதான் முதல் தடவை.

பாரிசிலிருந்து திரு அட்லாஸ் ஸ்டீவன்சன் இன்று நியுயோர்க் திரும்பி வந்து சேர்ந்தார்.

பிரான்சுக்கும் டூனிஷியாவுக்குமுள்ள தகராறு பரஸ்பர பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகாணக்கூடிய சாத்தியமுள்ளதென்றும் பிஸர்ட்டாவில் போர் நிறுத்தம் திருப்தியாக உள்ள தென்றும் சண்டைக்கு முன்னிருந்த நிலைகளுக்கு படைகள் திரும்பிச் செல்வதுகூட பேச்சுவார்த்தைகள் மூலம் செய்யக்கூடிய தென்றும் திரு. ஸ்டீவன்சன் தெரிவித்தார்.

## அயூப் கராச்சி திரும்பினுர்

கராச்சி, ஆக. 2

ஹைதராபாத்துக்கு ஒருநாள் விஜயஞ் செய்த பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் இன்று கராச்சிக்குத் திரும்பி வந்து ராவல் பிண்டிக் பிரயாணமானுர்.

## சுல்தானுக்கும் காலரா ஊசி

கோலாலம்பூர்

சரவாக்கில் காலரா பரவியதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இங்குள்ள மருத்துவ ஆராச்சிக் கூடத்திலிருந்து 5,000 டோஸ் காலரா தடுப்பு ஊசி மருந்து புருணைக்கு அனுப்பப்பட்டது.

இதே போன்று, சரவாக் மருத்துவ அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் காலரா தடுப்பு ஊசி மருந்துகள் சரவாக்கிற்கும் ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன.

புருணை சுல்தானுக்கும் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளதாக அங்குள்ள அதிகாரிகள் வெளியிட்ட ஓர் அறிக்கை கூறியது.

## 'இலங்கை ஒரு சுவர்க்க பூமி'

வத்தளை, புதன்

"பிறநாடுகளில் வரிகளின் உயர்வோ மிக அதிகம். அத்துடன் அந்நாடுகளைப் பல பிரச்சினைகள் பாதிக்கின்றன. இவற்றுடன் இலங்கையை ஒப்பிடும் போதும் இந்நாட்டை ஒரு சுவர்க்கம் எனலாம். தவிர இலங்கை மக்கள் பெருமளவு பொருளாதார சுதந்திரத்தையும் அனுபவிக்கின்றனர்". இவ்வாறு வண. மதிகி பனசிகா மகாநாயக தேரோ கொழும்பு மக்கலம் வீதியிலுள்ள கலால் இலாகாவைச் சேர்ந்த பௌத்த சாசன கமிட்டியிற் பேசும்போது குறிப்பிட்டார்.

# மேற்கு பாகிஸ்தானில் வெள்ளப் பெருக்கு

## நகரங்கள் துண்டிப்பு வீடு இடிந்து சிறுமி மரணம்

காரச்சி, ஆக. 2

மேற்குப் பாகிஸ்தானில் பலத்த மழை பெய்து வருவதால் ஐந்து நதிகள் பெருக்கெடுத்து கரை புரண்டோடுகின்றன.

மழையினுல் ஒரு வீடு இடிந்துவிழுந்ததில் ஒரு சிறுமி மாண்டாள் மற்றும் ஏழு பேர் உயிரிழந்திருக்கக் கூடுமென்று அஞ்சப்படுகிறது.

36 மணி நேரத்தில் 20 அங்குல மழை பெய்துள்ளது. பல நகரங்கள் துண்டிக்கபபட்டுள்ளன சில கிராமங்கள் வெள்ளத்தில் அமிழ்ந்தின. போக்குவரத்துக்கள் பல இடங்களிலும் துண்டிக்கப்பட்டுள்ளன.

## கரடிக்குப் பயந்து மரத்தில் ஏறினர்

கொழும்பு, புதன்

கதிர்காமத்திலிருந்து காட்டு வழியே கால்நடையாக படகும்பராவுக்கு சென்று கொண்டிருந்த கே. வேலுசாமி, எஸ். சரவணமுத்து, பி. நல்லையா, பி. கறுப்பையா, எம். இராசேந்திரன் ஆகிய ஐந்து யாத்திரிகர்களும் கதிர்காமத்திலிருந்து 13 மைல்களுக்கப்பால் கரடிகளால் தாக்கப்பட்டனர்.

கரடிகளிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக அவர்கள் ஒரு மரத்தின் மீது ஒன்றரை நாட்கள் வரை தங்கியிருந்தனர். பின்னர் ஒரு வேட்டையாடும் கூட்டத்தினரால் அவர்கள் காப்பாற்றப்பட்டு பாதுகாப்பான ஓர் இடத்துக்கு அனுப்பி வைக்கப்பெற்றன.

## கல்லோயாவில் பயின்ற வெளிநாட்டு மாணவர்

கொழும்பு, புதன்

அம்பாறையிலுள்ள கல்லோயா சபையின் தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தில் சென்ற கிழமை சித்தியடைந்த 20 பேரில் 9 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள்.

இம் மாணவர்கள் இங்கு பயில்வதற்காக தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த மலாயா, இந்தோனேஷியா, வடபோர்ணியோ, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலிலிருந்து வந்தவர்கள்.

இம் மாணவர்களுக்கு இரண்டு வருட காலம் பயிற்சி நடைபெற்றது. இவர்களுக்கு கல்லோயா அபிவிருத்தி சபையின் உபதலைவர் திரு. டபிள்யூ. ஐ. டி அழகரத்தினம் தகுதிப் பத்திரங்களை வழங்கினுர்,

வெளிநாடுகளிலிருந்து வந்த இம் மாணவர்கள், வெகுவிரைவில் தமது தாய்நாடுகளுக்குத் திரும்புவார்களெனத் தெரிகிறது.

# "இளம் பெண் தனித்து வாழ்ந்தால் பெண்மை கெடுகிறது"

கோலாலம்பூர்

**பெற்ரேரை விட்டு தனிமையாக வசிக்கச் செல்லும் மலாயா இளம் பெண்கள், தங்கள் பெண்மையை இழந்து ஆண்களைப் போன்ற மனேபாவத்திலேயே சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் தங்களை 'கெட்ட தாய்மார்கள்' ஆக்கிக்கொள்கின்றனர்.**

மலாயா இளம் கிறிஸ்தவத் தொண்டர் இயக்க ஆதரவில் எடுக்கப்பட்ட இளம் பெண்களும் குடும்ப வாழ்க்கையும் என்ற ஒரு ஆய்வு கண்ட முடிவு இதுவே.

இந்த ஆய்வு சென்ற வருடம் ஆகஸ்டு மாதத்தில் துவக்கப்பட்டு. அதன் அறிக்கை இன்று வெளியிடப்பட்டது.

'மலாயா பெண்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியேறித் தனிமையாக வசித்துக் கொண்டு, தங்கள் வாழ்க்கையைத் திறமையாகச் சமாளித்துக் கொள்வதில் பெருமை கொள்கின்றனர்.

அத்தகைய பெண்கள் வாழ்க்கை அனுபவங்களையும் அறிவையும் பெறுவதற்கு இது உதவியாக இருப்பதை நாம் ஒப்புக்கொண்ட போதிலும், ஒரு பெண்ணுக்கு முதலாவது அடிப்படையான கல்வி, குடும்பம்தான் என்பதை நாங்கள் திடமாக நம்புகிரேம்' என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

'இதில் உள்ள மற்ருெரு பிரதிகூல விளைவு, வீட்டை விட்டு தனிமையாக வசிப்பதன் மூலம் தன்னைப் பற்றியே தான் அதிக அக்கறை கொள்ளும் சுயநல மனேபாவம் வளர்ச்சி பெற ஆரம்பிக்கிறது... அவளது பெண் தன்மையும் ஓரளவுக்குக் குன்றி இருக்கிறது.

### பெண்மை மறைவு

"இதனுல் அத்தகைய பெண்கள் தங்கள் மக்கள் நலனில் சிரத்தை குறைந்தவர்களாகவும், லோகாயத விஷயங்களில் அதிகப் பற்றுள்ளவர்களாகவும் நேருகிறது". என்றது அறிக்கை.

சிறுவயதிலேயே பெண்களுக்கு, மக்கள் நலனில் அக்கறை கொள்ளவும், அனுதாபம் காட்டவும் கற்பிக்கப்பட்டிருந்தால், வேலை வாய்ப்பாக அவர்கள் பின்னர் தனிமையாகச் சென்று வாழ்ந்த போதிலும் பெண்ணினப் பண்பாடுகளை அவர்கள் பாதுகாத்து வரக்கூடும். இதற்கு அவர்களை வளர்த்த பெற்ரேர்களே பொறுப்பாவார்.

- பெற்ரேர்கள் தங்களது குழந்தைகளின் நல்ல பண்பாடுகளுக்கு ஆரம்பப் பாடசாலைகளையே நம்பியிருந்துவிடுகின்றனர். பாடசாலை, உதவிதான் செய்யுமேதவிர, பூரண பொறுப்பையும் அதுவே ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை அத்தகைய பல பெற்ரேர்கள் மறந்து விடுகின்றனா". என்றும் அறிக்கை கூறுகிறது.

வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் நல்லதொரு குடும்ப வளர்ச்சிக்கு உதவியாக இருக்கமுடிவதில்லை. இவ்வித தாய்மார்களில் பலர், குடும்பத்திற்கு தாங்கள் பணம் சம்பாதிக்க வேண்டியது அவசியமாகிறது என்று கூறுகின்றனர். அதேபோல் குழந்தைக்கு தாய்மார்களின் சீராட்டு வசதியும் நற்போதனைகளும், பணத்தைக் காட்டிலும் இன்னும் அதிக அவசியமானதாகும் என்று அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

## குருஷ்சேவ்

ரோம், ஆக. 1

சோவியத் பிரதமர் குருஷ்சேவ் விரைவில் இத்தாலிக்கு முதல் முதலாக விஜயம் செய்யப் போவதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. இத்தாலி பிரதமர் பான்பானி அடுத்த வாரம் மாஸ்கோவுக்கு விஜயம் செய்யப்போகிருர். அப்போது அவர் மரியாதைக்காகவாவது குருஷ்சேவை இத்தாலிக்கு விஜயம் செய்யுமாறு அழைக்கக்கூடும்.

## முஸ்லிம் மகாவித்தியாலயம்

பலாங்கொடை, புதன்

பலாங்கொடைத் தொகுதியிலுள்ள ஒரேயொரு முஸ்லிம் பாடசாலை மகாவித்தியாலயமாக உயர்த்தப்பட்டுள்ளது. இரத்தினபுரி பகுதிக்கு இதுவே ஒரு முஸ்லிம் மகா வித்தியாலயமாகும்.

ஏராளமான மாணவர்களுக்கு இங்கு இட வசதி இல்லாததால், நிரந்தரக் கட்டடம் ஒன்றை நிறுவுவதென இவ்வித்தியாலயத்தின் பெற்ரேர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

# மலாயா பேரரசர் இந்தியாவில் புலி வேட்டையாடுவார்

கோலாலம்பூர்

மலாயா பேரரசர் தமது இந்திய விஜயத்தின்போது புலி வேட்டையாடுவதற்கு இந்திய சர்க்காரால் ஏற்பாடு செய்யப்படலாம்.

மேலும் பேரரசரைக் கௌரவிப்பதற்காக ஒரு தர்பாரும் ஏற்பாடு செய்யப்படலாம்.

இவ்விரு நிகழ்ச்சிகளும் எலிசபெத் அரசியாரின் சமீபத்திய இந்திய விஜயத்தில் இடம் பெற்றன.

அரசியாரின் இந்திய விஜயத்தின்போது எடுக்கப்பட்ட திரைப்படம் குறிப்பிட்ட மலாயர்களுக்குக் காண்பிக்கப்படும்.

பேரரசருக்கு எவ்விதம் வரவேற்புகள் அளிக்கப்படும் என்று காட்டுவதற்காக இந்தப்படம் திரையிடப்படும்.

இத்தகவலை அறிவித்த இந்திய தகவல் அதிகாரி, பேரரசரின் விஜயம் குறித்து முழு விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகக் கூறினுர்.

புகழ்பெற்ற தாஜ்மகாலை நிலவொளியில் பேரரசர் காண்பார் என்றும், அதிபர் பிரசாத்துடன் ராஜாங்க விருந்தில் பேரரசர் கலந்துகொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

வரும் டிசம்பர் 7-ந் தேதியிலிருந்து டிசம்பர் 28-ந் தேதி வரை இந்தியாவில் பேரரசர் சுற்றுப்பிரயாணம் செய்யத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பேரரசர் தம்பதிகளுடன் ஓர் அமைச்சரும் செல்வார்.

அதிபர் பிரசாத்திற்கும் பிரதமர் நேருவிற்கும் பேரரசர் பரிசுகள் கொண்டு செல்வார்

### மணிவாக்கு

தெய்வமெனும் தத்துவம் எங்கும் பரந்த உயிரேயாம். அதன் அன்பு உயிர்ப் பொருள்கள் அனைத்தின் மீதும் ஒரே தன்மையதாய்ப் படிகிறது.

—அபேதாநந்தர்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆடி மீ 19உ (3 8-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## புதிய வரிகளுக்கு எதிர்ப்பு

புதிய வரிகளுக்கு எதிர்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அரசாங்க சிப்பந்திகளின் தொழிற் சங்கங்கள் மட்டுமன்றி வர்த்தக சிப்பந்திகளும், நடுத்தர வருமானமுள்ளவர்களும் இவ்வரிகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய முற்பட்டிருக்கின்றார்கள். அரசியல் நோக்கத்துடனே, அல்லது இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டுமென்பதற்காகவோ இந்த எதிர்ப்பு ஏற்படவில்லை. வாழ்க்கைச் செலவு பளுவை இவ்வரிகள் மேலும் உயர்த்துவதாக இருக்குமென்று அரசாங்க சிப்பந்திகள் உள்ளிட்டு பல தொழிற் சங்கங்களும் கவலைகொண்டுள்ளன. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் புனராலோசனை செய்து, பொது மக்களின் வாழ்க்கைச்செலவுகளை உயர்த்தாத வகையில் காரியம் செய்ய வேண்டும்.

வர்த்தக அமைச்சர் திரு. இலங்கரத்ன, தொழிற் சங்கங்களுக்கு இவ்விஷயமாக வெளியிட்டுள்ள ஒரு வேண்டுகோளில், அவர்கள் தவறான நடவடிக்கைகளை எடுக்கக்கூடாதென்றும், மக்களின் சங்கடங்களை உணர்ந்து, தேசியப் போராட்டத்தில் தங்கள் பங்கை நிறைவேற்ற வேண்டுமென்றும், கொள்ளை லாபம் அடிக்கும் கள்ள மார்க்கெட்காரர்கள்தான் விலைவாசிகள் உயர்வுக்குக் காரணமென்றும் அவர்களைப் பிடிப்பதில் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார்கள். விலைவாசிகள் உயர்வுக்குச் சில கள்ள மார்க்கெட்காரர்கள் காரணமாக இருக்கலாம். அவர்களை எதிர்த்துப் போராடுவதில் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டியதே.

ஆனால் வாழ்க்கைச் செலவுகளின் உயர்வுக்கு, கள்ளமார்க்கெட்காரர்கள் மட்டுமன்றி, புதிய வரிவிதிப்புகளும் காரணமென்பதை மந்திரி உணர வேண்டும். அரசாங்க சிப்பந்திகளின் சம்பள விசாரணைக் கமிஷன் தலைவரான திரு. வில்மட் பெரேரா, இவ்விஷயமாக ஒரு கூட்டத்தில் பேசுகையில் மாவு, சீனி, தீப்பெட்டி, இவ்விலைகளை நிதிமந்திரி உயர்த்தாதிருக்கலாமென்றும், இப்பளுவை, விவசாயியோ, அல்லது அரசாங்க குமாஸ்தாக்களோ தாங்க முடியாதென்றும் கூறி, ஒரு மாற்று யோசனையையும் தெரிவித்துள்ளார்.

நெல்லுக்கு புசல் ஒன்றுக்கு ரூ 12 உத்தரவாத விலையைத் தொடர்ந்து கொடுப்பதற்கு முடியாதென்றும், விவசாயிகளுக்கு புசலுக்கு ரூ. 6 அல்லது 8 தான் கிடைப்பதாயும், மற்றதை இடையிலுள்ள தரகர்கள் விழுங்குவதாயும் கூறி, இந்த பகற்கொள்ளையைத் தடுக்காவிடில் எந்த அரசாங்கத்தாலும், நாட்டின் பணநிலையைச் சீராக்க முடியாதென்றும் திரு. பெரேரா கருதுகின்றார். நெல்லின் உத்தரவாத விலைக்காக அரசாங்கம் பல கோடி உதவிப் பணம் கொடுத்து வருகின்றது. விவசாயிகளுக்கு இப்பணம் சேராமல் இடையிலுள்ளவர்கள் விழுங்குவதாயின், இதைப் பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டியதவசியம். திரு. பெரேரா கூறுவதுபோல் இது மிகச் சங்கடமான பிரச்னைதான்என்றாலும், பொது மக்களின் வாழ்க்கைச் செலவு உயராமல்தடுக்க வேண்டியதே அரசாங்கத்தின் முதல் கடமை.

இது தேசியப் பிரச்சினை. இச் சங்கடமான நிலைமையைச் சில கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயலுவது தீர்க்கதரிசனமாகாது. திரு. பெரேரா கூறுவதுபோல் பல கட்சியினரும் நல்லெண்ணத்துடன் கூடி, வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதுபற்றியும், மொழிப் பிரச்சினை, இந்தியா - இலங்கைப் பிரச்சினை, பொருளாதார அபிவிருத்தி, முதலியன பற்றியும் கலந்து பேசி, ஒத்துழைத்து அவற்றைத் தீர்க்க முற்பட வேண்டும். ஆனால் இன்றைய கட்சி வேற்றுமைகள் அதற்கு இடம் கொடுக்குமா?

# மலாயா பல்கலைக் கழகத்துக்கு நகரத்தார், ஈழத்தார் நன்கொடை

## தனிநாயக அடிகளார் நன்றி

கோலாலம்பூர்

மலாயா பல்கலைக்கழக இந்திய மொழி வளர்ச்சிக்கு நகரத்தார்கள் 1,10,000 வெள்ளி நன்கொடை வழங்கியமைக்குப் பல்கலைக்கழக இந்தியப் பிரிவுப் பேராசிரியர் தவத்திரு தனிநாயக அடிகளார் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மேலும் ஈழத்தார் வெள்ளி 33,000 வழங்கியமைக்கும் அடிகளார் நன்றி கூறினார்.

இந்நிதிகளின் வருவாயைக் கொண்டு இந்திய மொழித் துறையில் தமிழ் ஆராய்ச்சி நிகழ்த்துதல் கூடுமென்றும் தனிநாய அடிகளார் அறிவித்தார்.

மலாயா பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் சார்பாக ஒரு சிறப்புக் கூட்டம் சென்ற 20-7-61 அன்று பல்கலைக் கழகச் சொற்பொழிவு மண்டபத்தில் நிகழ்ந்தபோதே அடிகளார் மேற்கண்டவாறு கூறினார். அக்கூட்டத்தில் யோகி சுத்தானந்த பாரதியார் பேருரை நிகழ்த்தினர்.

தமிழ்ப் பேரவையின் மாணவர் தலைவர் திரு. எஸ். எம். பொன்னையா வரவேற்புரை வழங்கினார். தமிழகத்திலிருந்து மலையகத்துக்கு வருகை தந்திருக்கும் அடிகள் ஒருவர் பேசும் கூட்டத்திற்கு இங்குள்ள அடிகள் ஒருவர் தலைமை ஏற்பது பெரிதும் பொருந்துவதாகும் எனக்கூறி தவத்திருதனிநாயக அடிகள் அவர்களைத் தலைமை தாங்குமாறு வேண்டினார்.

இந்திய மொழிப்பகுதி பேராசிரியர் தவத்திரு தனிநாயக அடிகளார் அவர்கள் தம் முன்னுரையில் 'கவியோகியும் தவயோகியும் ஆகிய சுத்தானந்த பாரதியார் அவர்கள் தமிழ் மொழிக்குப் பல்லாற்றாலும் தொண்டாற்றியுள்ளார். பிற நாட்டு நல்லறிஞர் நூல்களை எல்லாம் தமிழ் மொழியில் பெயர்த்துள்ளார். அந்நூல்களை எல்லாம் யான் படித்து மகிழ்ந்திருக்கிறேன். அத்தகைய நல்லறிஞரை "இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்" என்னும் தலைப்பில் உரையாற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்" என்று குறிப்பிட்டார்.

யோகியார் அவர்கள் தமிழ் மொழியின் பரப்பினையும், சிறப்பினையும் பொதுவாக விளக்கி விட்டுத் தமக்குள்ள தென் கிழக்காசிய நாடுகளின் அனுபவங்களையும் குறிப்பிட்டார். இந்நாடுகளில் தமிழ்த்தொடர்பு பரவியிருக்கும் பாங்கிகளையும் பகர்ந்தார். பின்னர் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைப் போக்கிற்கு எங்ஙனம் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பாடல்கள் வழி வகுத்துத் தந்தன என்பதை வேதநாயகம் பிள்ளை, மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோருடைய பாடல்களைச் சான்றாகக் காட்டி விளக்கினார்.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞரான சுப்பிரமணிய பாரதியாருடன் தமக்கிருந்த நீண்டகாலத் தொடர்பினைச் சுவைபட விளக்கினார். பாரதியாருடைய பாடல்கள் எளிமையாகவும் இனிமையாகவும் இலங்குவதை இரண்டு மூன்று சான்றுகளுடன் எடுத்துரைத்தார். அடுத்தாற்போல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வெண்பாக்களின் சிறப்பினை மொழிந்தார். ஈழத்து அறிஞர் சோமசுந்தரப் புலவரின் கவிதைத் தொண்டினையும் குறிப்பிட்டார். இறுதியாகத் தாம் எழுதியுள்ள ஏராளமான பாடல்களையும், பாரதசக்தி மகாகாவியம் போன்ற நூல்களிலுள்ள கவிதைகளையும் இசையோடு இயம்பினார்.

தலைவர் அவர்கள் தம்முடிவுரையில் சொற்பொழிவாளரின் முத்தமிழ்ப் புலமையினை வியந்து பாராட்டினார். பல்கலைக் கழக இந்திய மொழி வளர்ச்சிக்கு நகரத்தார் ஒரு லட்சத்துப்பத்தாயிரம் வெள்ளி நன்கொடையாக நல்கியமைக்கும், ஈழத்தார் முப்பத்து மூவாயிரம் வெள்ளி வழங்கியமைக்கும் பாராட்டுத் தெரிவித்தார். இந்நிதிகளின் வருவாயைக்கொண்டு இந்திய மொழித் துறையில் தமிழ் ஆராய்ச்சி நிகழ்த்துதல் கூடும் என்றும் குறிப்பிட்டார்.

மலாயா புதிய கல்வித் திட்டத்தால்

# பல இன மக்களின் கலை, கலாச்சாரம் அழியாது

## டுன் லியோங் வலியுறுத்து

தைப்பிங்

மலாயாவில் வாழும் பல்வேறு இன மக்களின் மொழிகளையும் கலாச்சாரங்களையும் சர்க்கார் அழிக்க முயலுவதாக ஐயம் கொள்வது தேவையற்றது என்று டுன் லியோங் யூகோ வலியுறுத்தினார்.

தைப்பிங் சீன ஆசிரியர்கள் கூட்டத்தில் அரசாங்கத்தின் கல்விக் கொள்கையை விளக்கிப் பேசிய டுன்லியோங், பல்வேறு இன மக்களின் கலாச்சாரங்களுக்கும் மொழிகளுக்கும் சர்க்கார் பாதுகாப்பு அளித்துள்ளது, என்று சுட்டிக் காட்டினார்.

"இளம் வயதினரை நாட்டுப் பற்று நிறைந்த பிரஜைகளாகவும் சம்பாதிப்பதற்குத் தகுந்த திறமைசாலிகளாகவும் உருவாக்குதல், கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான சூழ்நிலையை உண்டாக்குதல் ஆகிய இலட்சியங்களை கல்விக்கொள்கை அடிப்படையாகக் கொண்டது" என்று அவர் கூறினார்.

நமது நாடு பல இன மக்களைக் கொண்டதாக இருப்பதால் கல்விக் கொள்கையில் இரு முக்கிய கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று கூறிய டுன் லியோங் மேலும் சொன்னார்.

"இந்த இரு கோட்பாடுகளில் முதலாவது, பல்வேறு இன மக்களின் மொழிகளையும் கலாச்சாரங்களையும் காப்பாற்றி அபிவிருத்தி செய்வது, இரண்டாவது, மலாயா தேசத்திற்கு ஒரு பொதுவான மொழியையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பது.

"ஒரு சுதந்திர ஐக்கிய நாட்டின் பொது மொழியும் கலாச்சாரமும் வளர்க்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்"

தேசிய மொழியை அபிவிருத்தி செய்வதால் மற்ற மொழிகளை அழிப்பது என அர்த்தமாகாது என்றார் அவர்.

கூட்டணி ஆட்சியில் இருக்கும் வரை தாய் மொழியிலேயே இலவச ஆரம்பக் கல்வி அளிக்கப்படும் என்று டுன் லியோங் உறுதியளித்தார்.

# திலகர் மறைந்த 41-வது தினம்

## மகாராஷ்டிரத்தில் கொண்டாட்டம்

பம்பாய், ஆக. 2

ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர் மறைந்த 41வது நினைவு தினம் நேற்று மகாராஷ்டிரம் முழுவதிலும் நாட்டின் இதர பல இடங்களிலும் கொண்டாடப்பட்டது.

ராஜத்துரோகக் குற்றச்சாட்டின்மீது திலகர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த ஏரவாடா மத்தியசிறைச் சாலையில் திலகரின் முழு உருவப்படம் நேற்று திரைநீக்கம் செய்யப்பட்டது.

பம்பாயில் பல இடங்களில் ஊர்வலங்கள் நடைபெற்றன. ஊர்வலத்தினர் கடற்கரையிலுள்ள திலகர்சிலைக்குச்சென்று மாலை அணிவித்தனர். அரசியல் கட்சிகளின் ஆதரவில் பல பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

அலகபாத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திலகர் நினைவாக ஒரு அரங்கமும், நூல் நிலையமும் அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

புதுடில்லியில் நடைபெற்ற ஒரு நினைவுக்கூட்டத்தில் இந்திய ரயில்வே மந்திரி திரு. ஜகஜீவன் ராம் பேசுகையில் மாகாணம், ஜாதிப்பித்துக்களை ஒழித்து பாரத மக்கள் அனைவரும் பாரத சமுதாயம் என்ற கொள்கையை நிலைநாட்டியவர் திலகர் என்று கூறினார்.

# பெற்றோர்தினமும் சுகாதார விழாவும்

மாவிட்டபுரம், புதன்

கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலையின் பெற்றோர் தினமும் சுகாதார விழாவும் திரு. வ. சரவணமுத்து தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெற்றன. முன்னை நாள் முகாமையாளராகவிருந்த திரு. வே. சிற்றம்பலம் அவர்கள் உரை நிகழ்த்தினர். தலைமையாசிரியர் திரு. சிவானந்தையர் நன்றி கூறினர்.

## ஐயாறன் எழுதுவது

ஒட்டுசுட்டானிலிருந்து ஓர் அன்பர் கீழ்க்கண்ட கடிதம் எழுதியுள்ளார்.

"29-7-61 ல் வேலணையிலிருந்து எனது விலாசத்துக்கு ஒரு தந்தி கிடைத்தது. அதைத் தங்கள் பார்வைக்கு அனுப்பி வைத்துள்ளேன்.

"சுந்தரம் அண்ணர் வந்துவிட்டார் வேலணையில், கிருஷ்ணலிங்கம்" என்று அதில் குறிப்பிட்டிருக்கிறது.

ஆனால் வேலணையில் கொடுத்த தந்தியின் உண்மையான வாசகம் என்ன தெரியுமா? "சுந்தரம் அண்ணர் இறந்துவிட்டார் வேலணையில், கிருஷ்ணசிங்கம்" என்பதுதான்.

தமிழ்த் தந்திகளில் இத்தகைய தவறுகள் அடிக்கடி வருவனதப் பார்க்கிறோம். இத்தவறு, தந்தி அதிகாரியினுடையதுதான். இதை அம்பலப்படுத்தி இத்தகைய தவறுகள் இனிமேலாவது வராமல் திருத்துவது பத்திரிகைகளின் கடமை. இந்தத் தந்தியையும் 'ஈழநாடு' வில் பிரசுரித்து, மேற்குறித்த இலாகாவின் செயலைக் கண்டிக்கும்படி பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று அக்கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

* * *

இத்தந்தியையும் கடிதத்தையும் ஒரு நண்பரிடம் காட்டினேன. அவர் வயிறு குலுங்கச் சிரித்துவிட்டார். எனக்கும் சிரிப்புத் தாங்கவில்லை.

ஒரு கதையுண்டு. "தவலை போயிற்று" என்று எழுதுவதற்குப் பதில்,ஒருவர், வாளைவை விட்டுவிட்டு அவசரத்தில் "தலை போயிற்று" என்று எழுதினாராம். ஆனால் நமது தந்தி இலாகாவோ, இறந்தவரை, வரச் செய்துவிட்டது!

கவலையீனமே இவ்வித தந்தித் தவறுகளுக்குக் காரணமாகும். தமிழில் தந்தி அடிக்க வசதி கிடைத்துள்ளது பெரிய காரியம். ஆனால் தமிழ்த் தந்தியில் இவ்வளவு கவலையீனமாக இருப்பதாயின், மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள்.

தவறு செய்வது யாருக்கும் இயற்கை. என்றாலும் தமிழ்த் தந்திதானே என்று கவலையீனமாகச் சிப்பந்திகள் யாரும் இருக்கப்படாது. தமிழ்த் தந்தியில் இனி அதிக கவனமாக இருந்து இவ்வித தவறுகள் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றே இதை எழுதுகின்றேன்.

* * *

தந்தியைப்பற்றி எழுதுகையில் மற்றோர் விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நிதிமந்திரி செய்த 'பட்ஜட்' பிரசங்கத்தின் விவரங்களை கொழும்பிலிருந்து நமது நிருபர் அவசர அவசரமாகத்தந்தியில் அனுப்பி வைத்தார்.

என்றாலும் தந்திவந்துசேருகிறதோ இல்லையோ என்று சந்தேகப்பட்டு, அங்கிருந்து விவரங்களை டெலிபோனிலும் தெரிவித்தார். நல்லவேளை.

அந்தத்தந்திகள் எப்போது கிடைத்தது தெரியுமா? மறுநாள் காலையில்தான்! இந்த மாதிரி பல்முறையும் நடந்திருக்கிறது. சில தந்திகளைத் தபால் மூலமே அனுப்பிவைக்கிறார்கள்! தினசரி பேப்பர் ஆபிஸுக்கான தந்தியை உடனுக்குடன் அனுப்பாவிட்டால், செய்தியும் பத்திரிகைக்குக் கிடைக்காதுபோவதுடன், தந்திக்காகச் செலவழித்த பணமும் வீணகிறது.

இனியாவது தந்தி இலாகா அதிகாரிகள் அதிக கவனமாக இருந்து, பத்திரிகைத் தந்திகளைச் சுணக்காமல் உடனுக்குடன் அனுப்பவேண்டுமென்று அறிவுறுத்தவே இதை எழுதுகிறேன். தயவு செய்து "நமது மிகக் கீழ்ப்படிதலுள்ள தந்தி ஊழியர்களை" பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

# டி. ஆர். பி. காரர்கள்மீது அரசாங்கம் கவனம்

கொழும்பு, புதன்

இலங்கையரல்லாத தற்கா லிக வாச பர்மிட் வைத்திருப் பவர்கள் குறிப்பிட்ட காலவரை கடந்தும் இங்கிருப்பது சம்பந் தமாக அவர்கள்மீது நடவடிக் கையெடுக்க குடியேற்ற வெளி யேற்ற இலாகாவும் துப்பறியும் பொலிசாரும் முனைந்துள்ளனர்.

தற்பொழுது கும்பனித் தெரு விலிருக்கும் பொலிஸ் ஸ்டேஷ னிலுள்ள கைதிகளை வைக்கும் அறைகள் சட்ட விரோதக் குடி யேற்றக்காரர்கள் எனச் சந்தே கிக்கப்பட்டவர்களையும் விஸா காலவரை கடந்தும் இங்கு தங் கியிருப்பவர்களையும் அடைத்து வைக்க உபயோகிக்கப்படுகி றது. மற்ற பொலிஸ் ஸ்டேஷன் களிலும் இவ்வித நபர்களை அடைத்து வைக்கக் கூடிய அறைகளைக் கட்ட ஏற்பாடுகள் செய்யப்படலாமெனத் தெரிகி றது.

நாடு கடத்தும் கட்டளைகளை விரைவாகக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைக் குடியேற்ற இலாகா எடுத்து வருவதாகத் தெரிகிறது.

சட்ட விரோதக் குடியேற்றம், இந்தியா-இலங்கை பிரச்சினை சம்பந்தமாக ஆராய நியமிக்கப் பட்ட விசேஷ கமிட்டியின் சிபார்சின் பேரிலேயே இவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸைத் தலைவராகக்கொண்ட இக்கமிட்டியில் குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டதி காரி திரு. ஹேர்பர்ட் தென்னக் கூன், திரு. டபிள்யு. டி. ஜெய சிங்கா, திரு. ஸி. பி. குமார சிங்கா, தேர்தல் கமிஷனர் திரு. பீலிக்ஸ டயஸ் அபயசிங்கா ஆகியோர் அங்கத்துவம் வகிக் கின்றார்கள்.

இந்த விசேஷ கமிட்டியுடன் கலந்து ஆலோசனை நடத்த இலங்கை-இந்திய ஸ்தானிகர் சேர் ரிச்சர்ட் அலுவிஹாரா விரைவில் இலங்கை வருவா ரென எதிர்பார்க்கப்படுகிறது.

## உடற்பயிற்சிப் போட்டி

மாவிட்டபுரம், வியாழன்

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினரால் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் கோஷ் டிகளின் உடற்பயிற்சிப்போட்டி யின் 3 வது வருடாந்த போட் டிக்குரிய விண்ணப்பப் பத்தி ரங்கள் இம்மாதம் 12ம் திக திக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வட மாகாணத் தில் உள்ள எல்லா விளையாட் டுக் கழகங்களையும் உதயதா ரகை மன்றத்தினர் கோரியுள் ளனர்.

இவ்வுடற்பயிற்சிப் போட்டி 3 பிரிவில் நடைபெறும். 15 வய திற்குக்கீழ்பட்டோர்கீழ்ப்பிரிவு என்றும், 20வயதிற்குக்கீழ்ப்பட் டோர் மத்திய பிரிவு என்றும், 20 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு என்றும் பிரிக்கப் பட்டுள்ளனர்.

இப்போட்டி இம்மாத பிற் பகுதியில் நடைபெறும்.

## கிரிக்கெட் சங்க வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் சங்கத்தின் வருடா ந்தப் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது கடந்த வருட சாப்பி யன்களான கிறீன் பீல்ட் கிரிக் கட் கோஷ்டிக்கு "சோமதிலகம்" வெற்றிக் கிண்ணத்தை இம் மாதம் 13ம் திகதி வழங்குவ தெனத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இப்பரிசளிப்பு விழா யாழ். மாவட்ட உதவி நீதிபதி சி. தனபாலசிங்கத்தின் தலைமையின் கீழ் யாழ். முற்ற வெளி மைதானத்தில் நடை பெறும். பரிசளிப்பு விழாவிற்கு முன் கிறீன்பீல்ட் கோஷ்டிக் கும், யாழ். தெரிவுக் கோஷ்டிக் குமிடையே ஓர் சிநேக பூர்வ மான மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெறும்.

## வாழ்க்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"சர்வ கலாசாலைகள் படிப் படியர்க மனிதத் தன்மையை வளர்க்க வேண்டும். எப்போது மனிதத் தன்மை பாதிக்கப்படு கிறதோ அதனுல் மனிதனும் பாதிக்கப்படுகிறுன். மனிதனை மனிதன் அடக்கி ஆள்வதும், முரட்டுத் தன்மையும் மறைய வேண்டும்

"மனிதர்கள் சர்வதேசப் பிர ஜைகள். இந்த நாடோ அந்த நாடோ என்பதல்லப் பிரச்னை. மனித வர்க்கமே வாழவேண் டும். இதற்கு மனித மனத்தில் மாற்றம் வேண்டும், சந்திர னின் மறுபக்கத்தைப் புகைப் படம் பிடிப்பதால் இது தீர்ந்து விடாது.

சகோதரத்துவம் தான் கடைசி உண்மை. மனித இனம் வாழ்கிறது. மனிதவர்க்கத்தின் நாகரிகத்திற்கு அதனுல் உதவ முடியும்."

சர்வகலாசாலை நூருவது ஆண்டு விழாவை முன்னிட்டு பிரத்தியேகமாக ஒழுங்கு செய் யப்பட்ட பட்டமளிப்பு விழா வில் டாக்டர் ஏ. லக்ஷ்மண சாமி முதலியாருக்கு விஞ்ஞா னத்தில் டாக்டர் பட்டமும், திரு ராஜமன்னருக்கு சட்டத் தில் டாக்டர் பட்டமும் கொடுத் துக் கௌரவிக்கப்பட்டனர். இதற்கென அமைக்கப்பட்ட பந்தலில் பல முக்கியஸ்தர்கள், கல்விமான்கள் உட்படப் பலர் கூடியிருந்தனர்.

## ஜப்பானில் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, ஆக. 2

ஜப்பானிலுள்ள ஒஸாகா நக ரில் ஆர்ப்பாட்டம் செய்த 2000 பேரைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும், குறுந்தடிப் பிரயோகமும் செய் தனர்.

விபத்து ஒன்று நடந்ததைத் தொடர்ந்து இச்சம்பவம் ஏற் பட்டது. விபத்துக்குள்ளானவ ரைக் கவனியாமல் ரஸ்தாவி லேயே விட்டுவிட்டு, பொலிசார் விசாரணை நடத்தியதைக் கண்டு ஆத்திரமடைந்த ஜனக் கூட்டம் இவ்விதம் ஆர்ப்பாட்டம் செய் தது.

## ஜப்பான் மறுப்பு

டோக்கியோ, ஆக. 2

அமெரிக்கா, ஜப்பானிலுள்ள தங்கள் தளங்களுக்கு அணு ஆயுதங்களைக் கொண்டுவர ஜப்பான் மறுத்துவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## இந்திய தேயிலை பாதிக்கப்படும்

சென்னை, ஆக. 2

பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர்ந்தால் இந்தியத் தேயிலையின் எதிர் காலம் பாதிக்கப்படும் என பிரபல தோட்டச் சொந்தக் காரர் திரு. ஸி. வி. சுப்பு கூறினர்.

## இந்தியாவுக்கு ஜாப். கடனுதவி

டோக்கியோ, ஆக. 2

இந்தியாவின் 3-ம் ஐந்தாண் டுத் திட்டத்துக்கு 8 கோடி டாலர் ஜப்பானிய கடனுதவி பற்றி இன்று டோக்கியோவில் இரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

## விடுதலைக்கு வரவேற்பு

லண்டன், ஆக. 2

கென்யா தலைவர் ஜோமா கென்யாட்டா விடுதலை செய் யப்படுவார் என்ற செய்தியை ஆபிரிக்கா முழுதுமுள்ள தலை வர்கள் வரவேற்றிருக்கிருர் கள்.

## "போராட்டம் ஓயாது" —போர்கிபா

டுனிஸ், ஆக. 2

பிஸர்ட்டாவிலிருந்து கடைசி பிரெஞ்சு துருப்பு வெளியேறும் வரை போராட்டம் ஓயாது என ஜனதிபதி போர்கிபா கூறினர்.

## பிஸர்ட்டா பற்றி ஸ்டீவன்ஸன்

வாஷிங்டன், ஆக. 2

பிஸர்ட்டா பிரச்சினையை ஆராய ஐ. நா. விசேஷக் கூட் டத்தை நடத்துவது அவசிய மற்றது என ஐ. நா. விலுள்ள அமெரிக்க பிரதிநிதி திரு. அட் லாய ஸ்டீவன்ஸன் கூறினர். பிரான்ஸ்-டுனிஸிய தகராறைத் திருப்திகரமாய்த் தீர்க்கவழி யுண்டு என்றும் அவர் கூறி னர். பிஸர்ட்டாபற்றி முதலாவ தாக வெளியான உத்தியோக ரீதியான அமெரிக்க கருத்து இதுவேயாகும்.

## சிங்கப்பூரில் திரு. சுப்ரமண்யம்

சென்னை, ஆக. 2

சென்னை நிதிமந்திரி திரு. ஸி. சுப்ரமண்யம், வெளிநாடு களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு சென்னை திரும் பும் வழியில் சிங்கப்பூர் வந் தார். 4 நாள் அங்கு தங்கும் அவர், சிங்கப்பூர் நிதிமந்திரி யைச் சந்திப்பார். துறைமுகம், கடற்படைத்தளம் ஆகியவற் றைப் பார்வையிட்டபின் அவர் சென்னை வருவார்.

## ஆகஸ்ட் 6-ல் ஹிரோஷிமா தினம்

கொழும்பு, புதன்

ஹிரோஷிமா தினமான ஆகஸ்ட் 6-ம் தேதி மாலை 5 மணிக்கு இலங்கை சமாதான சபை, செஞ்சிலுவைச் சங்கத் தில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தும்.

## எம். பி. க்களுக்கும் சுருட்டுத் தட்டுப்பாடு

கொழும்பு, புதன்

பார்லிமெண்டிலுள்ள உணவு விடுதியில் நேற்று சில எம். பி. க்கள் விலைகுறைந்த சுருட்டு கேட்டபொழுது 'இல்லை' என்ற பதிலைத்தான் பெற்ருர் கள். அங்கு சுருட்டு இல்லாத தினல் அவர்கள் அருகிலுள்ள கபே ஒன்றில் அதிக விலை கொடுத்து சுருட்டு வாங்க வேண்டியதாக இருந்தது.

## வெள்ளம்

சென்னை, ஆகஸ்ட் 2

கோயமுத்தூரில் பவானி நதியின் நீர்மட்டம் 7 அடியில் இருக்கிறது. தஞ்சாவூரில் வெட் டாற்றுக்கரைக்கருகில் 2கிரா மங்களில் இன்னும் வெள்ளம் தேங்கியிருக்கிறது.

# கல்வி மூலம் அஹிம்ஸா உணர்ச்சியை புகுத்தினல் போரைத் தவிர்க்கலாம்

## உலகம் வாழ்வதற்கு நேருஜி கூறும் யோசனைகள்

புதுடில்லி, ஆக. 2

"உலகம் முன்னேறுவதற்கு ஏன், உயிர்வாழ்வதற்கே சமா தான, கூட்டுறவு, சர்வதேச நோக்குடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று பிரதமர் நேரு இங்கு கூறினர்.

"சிக்கலும் அபாயமும் நிறைந்த பிரச்சினைகள் உலகை எதிர்நோக்கியுள்ளன. அடுத்த சில மாதங்களில் நமக்கு என்ன நேரிடும் என்று நாம் சொல்லுவதற்கில்லை" என்ருர் நேரு.

ஆசிரியத் தொழில் ஸ்தாப னங்களின் உலக சம்மேளன 10-வது அசெம்பிளியைத் துவக்கிவைத்து நிகழ்த்திய உரையிலேயே நேரு இவ்வாறு குறிப்பிட்டார்.

உலகமக்கள் சமாதானமாக வும், ஒற்றுமையாகவும் வாழ்வ தற்குக் கல்வி உதவியாக இருக்கவேண்டும் என்றும், இந்தவகையில் கல்வியின் பொறுப்புகள் மகத்தானவை என்றும் நேருஜி குறிப்பிட் டார்.

தனிப்பட்ட மனிதரும் தேசங் களின் மக்களும் ஒருவரை ஒரு வர் புரிந்துகொள்ளவும் சகித் துக்கொள்ளவும் போதிக்கும் பொறுப்பு கல்விக்கு உண்டு என்று அறிவுறுத்துகையி லேயே நேருஜி சர்வதேச நிலை மையைப்பற்றி பொதுவான கருத்துகளைத் தெரிவித்தார்.

நேருஜி தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"பயம், துவேஷம் முதலிய உணர்ச்சிகளுடன் எந்தப் பிரச் சினைகளையும் அணுகக்கூடாது. கெடுபிடிப் போர், பயம் காரண மாகவும், துவேஷம் காரணமா கவுமே ஏற்படுகின்றது. சிக்க லான பிரச்சினைகள் உலகத்தை எதிர்நோக்கியுள்ள இந்தச் சம யத்தில், நாம் கூடியிருக்கிறோம். இது மிகவும் கஷ்டமான நிலை மையாகும். என்ன கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்கு இந்தப் பிரச்சினைகள் நம்மைத் தூண்டு கின்றன.

### கல்வியின் நோக்கம்

நேருஜி மேலும்கூறியதாவது:-

"இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்குக் கல்வி உதவ வேண் டும். ஆனல் கல்வித் துறையில் மிகவும் முற்போக்கில் உள்ள நாடுகள், தமது தொழில் நுட்ப திறமை மூலமாக வறுமை போன்ற பிரச்சினைகளை தீர்த் துக்கொண்டிருப்பினும் ஒன்றோ டொன்று ஒற்றுமையாக வாழ முடியவில்லை. அவை பரஸ்பரம் விரோதம் பாராட்டுகின்றன."

கல்வியின் பொறுப்புகளை நேருஜி பின் வருமாறு குறிப் பிட்டார்:- "கல்வியின் பொறுப் புக்கள் நமது நாட்டிற்கு மாத் திரமல்ல, கல்வி மூலம் நமக்கு ஏற்படும் பொறுப்புக்கள் சர்வ தேச தன்மை வாய்ந்தவை. இன்றைய உலகில் தேசங்கள் ஒன்றோடொன்று பிணைக்கப் பட்டுள்ளன. தூரத்தை விஞ்ஞா னம் வென்றுவிட்டது.

"இந்தக் காலத்தில் நாடு களின் ஆதிபத்திய சுதந்திரத்திற்கு சிறிதும் பொருள் இல்லாமல் போய் விட்டது. ஜெட் விமானங்கள் பல நாடுகளைக் கடந்து பறந்து கொண்டிருக்கும் இந்தக்காலத் தில் குறுகிய தேசிய மனப் பான்மைக்கு இடம் இல்லை. அப்படி இருந்தும் பல முற் போக்கு உள்ள நாடுகள் கூட குறுகியபத்தாம் பசலிக் கொள் கையைத் துறக்கவில்லை. அவை தமது இன அபிமான த்தைத் துறக்கமுடியவில்லை. மற்றும் சில நாடுகள் தாம் விரும்புவது போலவே உலகம் நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றன. அவ்வாறு செய்ய உலகம்தவறி னல் அந்த நாடுகளுக்குக் கோபம் வந்துவிடுகின்றது.

நேருஜி மேலும் கூறிய தாவது:

உலகம் முழுவதும் ஒரேமாதிரி யாக இல்லை. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. ஒரு நாட்டு மக் கள் சிந்திப்பது போல பிறி தோர் நாட்டு மக்கள் சிந்திப் பதில்லை. வாழ்க்கை முறையி லேயே வேறுபாடுகள் இருக் கின்றன. ஒருவர் வாழ்க்கை முறையை மற்ருெருவர் மீது புகுதத முடியாது. எங்கள் நாட்டில் சகிப்புத் தன்மை அதிகமாகவுள்ளது. உண்மைக் குப் பல தோற்றங்கள் உண்டு. தனிப்பட்ட நாடுகளோ அன்றி தனிப்பட்டவர்களோ தாம் கூறுவதே உண்மை என்று பிடிவாதம் செய்ய முடியாது.

"மக்களின் மனதிலேயே முதலில் போர்கள் ஆரம்பமா கின்றன என்று யுனஸ்கோ பீடிகையில் கூறப்பட்டுள் ளது. ஆகவே பலாத்கார உணர்ச்சி மக்களின் மனதில் ஏற்படாமல் செய்வதற்குக் கல்வி நிச்சயமாக உதவ முடி யும். இன்றைய உலகில் கெடுபிடிப் போர் நடந்து கொண்டிருக்கிறது. இந்த முறையைக் கைவிட்டு சமா தானமாகவும், ஒத்துழைப்புட னும் மக்கள் வாழும்படி செய் வதுதான் அடிப்படை தேவை. இந்தத் தேவையைக் கல்வி பூர்த்திசெய்யவேண்டும்"

## கைம்பெண்ணைக் காணவில்லை

யாழ்ப்பாணம், வியாழன்

கதிர்காமத்துக்குச் சென்றி ருந்த நல்லூரைச் சேர்ந்த வல்லிபுரம் கைம்பெண் பங்கஜ வல்லியைக் காணவில்லை. இவ ருக்கு வயது 65. சில பெண்க ளுடன் சென்றிருந்த இவர் பெண்கள் மத்தியில் தூங்கிக்கொண்டிருந்த பொழுது ஜூலை 17ந் திகதி காலையில் இருந்து காண வில்லை. உறவினர்கள் தேடிப் பார்த்தும் இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை.

## கூட்டுறவு ஸ்தாபன உணவுப்பொருட்கள் தனிப்பட்டவரிடமும் வாங்கலாம்

கொழும்பு, புதன்

இதுவரை கூட்டுறவுச் சங் கங்கள் மூலம் மட்டும் கிடைத்த உணவுப் பொருட்களை தனிப் பட்டவர்களிடமிருந்தும் பெறு வதற்கான ஏற்பாடுகளை கூட் டுறவு மொத்த விற்பனை ஸ்தா பனம செய்துவருகிறது.

இதுசம்பந்தமாகபலசில்லறை வியாபாரிகள், சங்கங்களும், தனிப்பட்ட சில்லறை வியா பாரிகளும் பதிவுசெய்யப்படு கின்றனர்

## பாவனைக்கு லாயக்கற்ற பழுப்புச் சீனி

கொழும்பு, புதன்

உணவு இலாகாவால் தனிப் பட்ட கொந்தராத்துக்காரர்க ளுக்கு, விற்கப்பட்ட 1400 டன் உபயோகமற்ற பழுப்புச்சீனி, கொழும்பிலும் இதர பகுதிக ளிலும் நடமாடிவருகிறது. இது பாவனைக்கு லாயக்கற்றதென அறிவிக்கப்படுகிறது.

# அம்பாந்தோட்டையில் உப்புத் தட்டுப்பாடு!

கொழும்பு, புதன்

உப்பு உற்பத்தி செய்யப்படும் அம்பாந்தோட்டையில் உப்புக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க உப்பின் விலை 6 சதம் அதிகமாக உயர்ந்துள்ளது.

தேசிய உப்புக் கார்ப்பரேஷனின் பிரதான இடங்களாகிய பலருப்பான, மகாலிவயா, பண்டாலா ஆகிய இடங்களில் உப்புப் படுக்கைகளை ஏற்படுத்த உப்பு இலாகா தவறிவிட்டதால் உப்பு விளையவில்லை. மகாலிவயா, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுள்ள உப்புப் படுக்கையில் உள்ள உப்பு இன்று 3 மாதங்களுக்குத்தான் போதுமானது. மற்றப் படுக்கைகளில் உப்பில்லை.

வெயில் காலம் போய்விட்டபடியால் அடுத்த வருட ஜனவரிமாதம்வரை மழை தொடர்ந்து பெய்யுமாகையால் இனிமேல் உப்பு உற்பத்தி செய்ய முடியாது.

இப்போது அப்பகுதியிலுள்ள 90 மொத்த வியாபாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 120 அந்தர் உப்பு வீதம் விநியோகிக்கப்படுகின்றது.

உப்பு வியாபாரிகள் சங்கத் தலைவரும், அம்பாந்தோட்டை வரியிறுப்பாளர் சங்கத் தலைவருமான திரு. அம்ஸா விடுத்துள்ள செய்தியில் உப்புத் தாராளமாக விளையும் அம்பாந்தோட்டைக்கே இன்று உப்பு இறக்குமதி செய்யப்பட வேண்டி இருக்கிறது என்றும் உப்பு உற்பத்திச் சரித்திரத்திலேயே இப்படி நடந்ததில்லை என்றார்.

மேலும் அம்பாந்தோட்டையின் உப்பு உற்பத்தி சீர்குலைந்ததற்கு தேசிய உப்புக் கார்ப்பரேஷனையும் அதன் ஊழியர்களையும் அவர் குறை கூறினர்.

## செனட்டர் பதவி
### சனசமூக நிலையம் கோரிக்கை

நெல்லியடி, வியாழன்

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரான திரு எம். சி. சுப்பிரமணியத்தை செனட்சபையில் ஓர் நியமன அங்கத்தவராக தெரிவுசெய்யும்படி கேட்டுக்கொள்ளும் மகஜரைப் பிரதம மந்திரிக்கு அனுப்புவதென்று கரவெட்டி தயாநிதி சனசமூக நிலையத்தின் கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டம் திரு. ஏ. குலேந்திரம் தலைமையில் திங்கட்கிழமை நடைபெற்றது.

தயாநிதி சனசமூக நிலையத்தில் ஓர் பால்விநியோகநிலையத்தை திறந்து தருமாறு சுகாதார மந்திரியைக் கேட்டுக்கொள்வதென்றும் இதுசம்பந்தமாக அம் மந்திரியைப் பேட்டிகாண்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

## கரும்பு அறுவடையில் மாணவர்களும அதிகாரிகளும்

அம்பாரை, புதன்.

அம்பாரையிலுள்ள தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த பணியாளர்களும் 140 மாணவர்களும் கரும்பு அறுவடையில் ஈடுபட்டனர்.

கடந்த புதன்கிழமையன்று உபதலைவர் திரு. டபிள்யூ. டி. ஐ. அழகரத்தினம, காரியதரிசி திரு. என். டி. ஜபவீரா மற்றும் கல்லோயா அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த அதிகாரிகளும் கரும்பு அறுவடை விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்களும் மற்றும் பணியாளர்களும் தொடர்ந்து ஒரு வாரகாலக் கரும்பு அறுவடை செய்வார்கள்.

# "கியூபாவில் நிறத்துவேஷம் கிடையாது"
## டாக்டர் பெரேரா தகவல்

கொழும்பு, புதன்

"கியூபா கம்யூனிஸத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கவில்லை. கியூபாவில் நிறத்துவேஷமும் கிடையாது" என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா நேற்று மாலை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் "நான் கண்ட கியூபா என்னும் பொருள் பற்றிப் பேசிய பொழுது கூறினர்.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்த டாக்டர் என். எம். பெரேரா பின்னர் கியூபாவுக்கும் சென்றுவிட்டு இலங்கை திரும்பினர்.

"ஆடம்பரமான கியூபா ஹோட்டல் ஒன்றில் 500 கியூபா அழகிகள் மத்தியில் நிற்க வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. இருக்கக்கூட இடம் கிடைக்கவில்லை" என்று டாக்டர் பெரேரா கூறினர்.

"நாட்டின் கிராமப் புறங்களிலிருந்து நகரின் வசதிகளை அனுபவிப்பதற்காக அந்த 500 இளம்பெண்களும் வந்தவர்கள் என்று ஹோட்டல் அதிகாரிகள் தெரிவித்தனர். வாரக் கடைசியில் கிராமப்புறஇளமங்கையர்களை நகருக்கு அழைத்து நகரம் அளிக்கக்கூடியசகலவசதிகளையும் அவர்களுக்கு அளிப்பது வழக்கம்" என்று டாக்டர் பெரேரா தெரிவித்தார்.

இரண்டரை மணி நேரம் "நான் கண்ட கியூபா" பற்றிப் பேசிய டாக்டர் பெரேரா தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:-

ஏற்கெனவே நாங்கள் அறிந்ததுபோல் கியூபாவில் ஒரு அரசாங்கம் இல்லை. பார்லிமெண்ட் போலவும் அங்கு ஒன்று கிடையாது. கியூபாவின் பொருளாதாரக் கொள்கைகளை டாக்டர் பிடல்காஸ்ட்ரோவே, லட்சக் கணக்கான மக்கள் முன்னிலையில் மணிக் கணக்காகப் பேசும்பொழுது வெளியிட்டுக் கொள்வார்.

எந்தச் சமயத்திலும் கியூபா மீது அமெரிக்கா படையெடுக்கக் கூடுமென்ற அச்சமிருப்பதால் கியூபாவில் நிரந்தரப் புரட்சியிருக்கிறது. புரட்சிப் படைகள் இன்னும் அங்கே இருக்கின்றன.

கியூபாவிடம் அமெரிக்கா நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால் அமெரிக்காவைக் கியூபா மன்னிக்குமென்றே எனக்குத் தோன்றவில்லை. கியூபா மன்னிப்பளிக்க முடியாவிட்டால் ஆசிய நாடுகள் எப்படி அளிக்குமென்று எனக்குப் புரியவில்லை. அமெரிக்கர்வின் நடவடிக்கைகளை கநாங்கள் ஆதரிக்காததுமட்டுமல்ல, கியூபா மீதும் கியூபா மக்கள்மீதும் அமெரிக்கா மனிதத்தன்மையற்ற முறையில் நடந்து கொள்வதற்கு எங்கள் ஆட்சேபத்தையும் தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் இதுபோன்ற நடவடிக்கைகளில் இறங்குமுன் அமெரிக்கா ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசனை செய்யும்.

எப்பொழுதும் ஆயுதந் தாங்கியபடி நிற்கும் ஒரு நாடு கியூபா. கியூபாவிலுள்ள ஒவ்வொரு கட்டடமும், பாலமும், இலாகாவும் மக்கள் எந்நேரமும் காவல் புரியப்படுகிறது. சம்பளம் கொடுக்கப்படாத, வயல்களில் வேலை செய்யும் இராணுவத்தைக் கொண்ட நாடு கியூபா.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லேடன்" தயாரிப்பு
Leyden L.I.L
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!
அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்.
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

10,000,000
மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND
டொலர் பவுன் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?
டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!
எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!
டொலர் பவுனை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!
தயாரிக்குமிடம்:
அலுமீனியம் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
ſD. 3

குதிரைப்பந்தயச் செய்திகளையுடைய

# வெளிநாட்டு சஞ்சிகைகள் பத்திரிகைகள் கைப்பற்றப்படும்

கொழும்பு, புதன்

குதிரைப்பந்தயச் செய்திகளைக் கொண்டு வெளியாகும் வெளிநாட்டு தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகளைக் கைப்பற்றுமாறு பிரதம சுங்க கலெக்டருக்கும் பொலிசாருக்கும் உள்நாட்டு அமைச்சு உத்தரவிடும்.

இலங்கையில் குதிரைப் பந்தயச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கு அரசாங்கம் தடைவிதித்த பின் வெளிநாட்டுப் பத்திரிகைகள் பெருமளவில் இலங்கையில் வந்து குவிவதால இந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளதாக உள்நாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குதிரைப்பந்தயச் செய்திகளுக்கு தடைவிதிக்கும் அரசாங்கத்தின் நோக்கத்தை அந்நிய பத்திரிகைகள் சஞ்சிகைகள் பெருமளவில் இங்கு இறக்குமதியாவதன்மூலம் முறியடித்து விட்டதென்று அந்த அதிகாரி கூறினர்.

வெளிநாடுகளில் நடைபெறவிருக்கும் குதிரைப் பந்தயங்கள் சம்பந்தமான செய்திகளைத் தாங்கிக்கொண்டு தபால் மூலம் வரும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் கைப்பற்றுமாறு போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுக்கும் உள்நாட்டு அமைச்சு உத்தரவிடும்.

இலங்கையில் நடைபெறும் குதிரைப் பந்தயங்கள் சம்பந்தமான செய்திகளைத் தாங்கிக் கொண்டு இந்தியப் பத்திரிகைகள் சில இலங்கைக்கு வந்து சேருகின்றனவாம்.

இலங்கை குதிரைப்பந்தயச் செய்திகள் பிரசுரிக்கப் பட்டுள்ள சஞ்சிகைகள், பத்திரிகைகள் புத்தகக்கடைகளில் காட்சிக்காகத் தொங்கவிடப்பட்டிருந்தால் அவைகளைக் கைப்பற்றி எடுத்துச் செல்லுமாறு பொலிசாருக்கு உள்நாட்டு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. குதிரைப் பந்தயச் செய்திகளை வெளியிடுவோர் மீதும் விற்பனை செய்வோர் மீதும் வழக்குத் தொடரும்படி பொலிசாருக்கு விசேஷமாக உத்தரவிடப்பட்டுள்ளது.

## தேநீர் அருந்திய மூவர் மரணம்

ஹிஸ்சார், வடஇந்தியா, ஆக. 2

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர், இங்குள்ள கிராமமொன்றில் தேநீர் அருந்திய பின்னர் இறந்து விட்டனர்.

தேநீர் தயாரிக்கப்பெற்ற வெந்நீரில், எதிர்பாராத விதமாக பாம்பு ஒன்று அதில் அவிந்து விட்டது. ஆனல் இந்த விஷயம் தேநீர் தயாரித்த சமயம் தெரியாமலே இருந்து விட்டது. பாம்பு வெந்த வெந்நீரில் தேநீர் தயாரிக்கப்பட்டது. நச்சுத்தன்மைகொண்ட அத் தேநீரை அருந்திய தாய், அவருடைய மகன், மகள் ஆகிய மூவரும் ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் மரணமடைந்தனர்.

தண்ணீர் கொதிக்க வைப்பதற்கு, உபயோகிக்கப்பட்ட 'கேத்தலில்' பாம்பு ஒன்று வெந்து கிடந்ததை அயல் வீட்டுக்காரர்கள் பார்த்தார்கள்.

## தென்னபிரிக்க பொதுத்தேர்தல்

டர்பன், ஆக. 2

இவ்வருடம் ஒக்டோபர் மாதத்தில் தென்னபிரிக்காவில் பொதுத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

# உடுப்பிட்டி பெண்கள் பாடசாலையின் சாதனை

## வடமாகாண பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன் வடமாகாணப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டியில், வட்டாரப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட 35 பாடசாலைகள் நேற்று மாலை பங்கு பற்றின. இப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வடமாகாண கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் சி. மயில்வாகனம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். திருமதி மயில்வாகனம் பரிசில்களை வழங்கினர்.

மிகத்திறமையான பெண்கள் உடற்பயிற்சிக் கோஷ்டியினருக்கு கொடுக்கப்படும் "சிலோன் இன்சூரன்ஸ்" வெள்ளிக் கிண்ணத்தை உடுப்பிட்டி பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட கோஷ்டி சுவீகரித்துக் கொண்டது. ஆண்களுக்கான வெள்ளிக் கிண்ணத்தை உடுவில் மான் பாடசாலையைச் சேர்ந்த 19 வயதுக்குட்பட்ட கோஷ்டியினர் சுவீகரித்தனர்.

போட்டி விபரம் வருமாறு:-

1. வட்டார வித்தியாதரிசிகள் கிண்ணம் - 13 வயதுக்குட்பட்ட ஆண்கள்:

மல்லாகம் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மெமோரியல் கல்லூரி, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை.

2. மாவட்ட வித்தியாதரிசிகள் கிண்ணம் – 16 வயதுக்குட்பட்ட ஆண்கள்:

மானிப்பாய் மெமோரியல் கல்லூரி, மல்லாகம் இந்துக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி.

3. என். சி. ஓ எம். எஸ். வெள்ளிக்கிண்ணம் –19 வயதுக்குட்பட்ட ஆண்கள்:

உடுவில் மான் பாடசாலை, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, நெல்லியடி அரசினர் மகா வித்தியாலயம்.

4. டாக்டர் துரைராசா வெள்ளிக்கிண்ணம் - 13வயதுக்குட்பட்ட பெண்கள்:

உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை, சுளிபுரம் விக்டோரியா கல்லூரி, சண்டிலிப்பாய் வனிநிகேதன பாடசாலை.

5. இ. டி. ஆர். சி. வெள்ளிக்கிண்ணம் - 16 வயதுக்குட்பட்ட பெண்கள்:

உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை, மானிப்பாய் மெமோரியல் கல்லூரி, சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

6. ஏ. டி. துரையப்பா வெள்ளிக்கிண்ணம் - 19 வயதுக்குட்பட்ட பெண்கள்:

உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை, சண்டிலிப்பாய் வனிநிகேதன பாடசாலை.

# 'நாம் எல்லோரும் சாப்பாட்டு ராமர்கள்!'

—உணவு மந்திரி

எட்டியாந்தோட்டை, புதன் "நாங்கள் எல்லோரும் சாப்பாட்டு ராமர்கள். ஆனால் உணவு உற்பத்திப் பெருக்கத்தில் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கையில், நாம் வெகுதூரம் பின் நிற்கின்றோம். இந்த உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்" என்று தெறியங்கலா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இளம் விவசாயிகள் சட்டத்தில் விவசாய உதவி மந்திரி திரு. முதியன்சே தென்னக்கூன் பேசுகையில் கூறினார்.

# 'நாட்டின் பிரச்சினைகளைத்தீர்க்க கட்சி மனப்பான்மை ஒழிய வேண்டும்'

—வில்மட் பெரேரா

கொழும்பு, புதன் கலயத்தா பௌத்த ஞாயிறு பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் திரு. வில்மட் ஏ. பெரேரா பேசுகையில் ஒரு புசல் நெல்லை ரூ. 12 வீதம் அரசாங்கம் தொடர்ந்து வாங்க முடியாது என்றும் சாதாரண விவசாயி ஒருவருக்கு புசல் ஒன்றுக்கு ரூ. 12 கிடைப்பதில்லை என் ... தபார்லிமெண்ட் அங்கத்தவர்கள் அறிவார்களோ என்று கேட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:- "தனிப்பட்ட முறையில் நான், அநுராதபுரம், குருநாகல் ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கிராம விவசாயிகளைச் சந்தித்து இது பற்றி விசாரித்தேன். அநேகர் புசல் ஒன்றுக்கு ரூ. 6 அல்லது 8க்குத்தான் பெறுகின்றார்கள், மிகுதிப் பணம் தரகர்களுக்கும் ஏஜெண்டுகளுக்கும்தான் கிடைக்கின்றது.

கமக்காரர்களிடமிருந்து பணம் பறிக்கும் இந்த முறை ஒழிந்தாலன்றி எந்த அரசாங்கமும் நமது நிதிநிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இது ஒரு முக்கியமான ஒரு பிரச்சினையாகும்.

இதனுடன் கூடவே இன்னும் மூன்று பிரச்சினைகள் இடம் பெற்றிருக்கின்றன. 1. மொழிப் பிரச்சினை. 2. இலங்கை இந்தியப் பிரச்சினை. 3. பொருளாதார விருத்தித் திட்டம். இம்மூன்று பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்ப்பதற்கு இந்நாட்டிலுள்ள எல்லாத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து நல்லெண்ணத்துடனும், விரிந்த மனப்பான்மையுடன் இவற்றைத் தீர்க்க முன்வர வேண்டும்.

இப்போதுள்ள இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்நாட்டின் பிரஜைகள் என்ற பேரில் உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்பதென்னவெனின் கட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்ற கட்சி மனப்பான்மையுடன் இவற்றை நோக்காது நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி இவற்றை சுமுகமாகத் தீர்த்து வைக்க முன்வாருங்கள் என்பதேயாகும்."





ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: **ஸி. டப்ளியூ. ஈ.**

**கிடைக்குமிடம்:** ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது

CWE/TX


# தொழிலாளருக்கு சேவைப் பாதுகாப்பு

## தொழில் மந்திரி புதிய சட்டம் கொண்டு வருகிறார்

கொழும்பு, புதன் சில முதலாளிமார்களின் அநியாயமான நடவடிக்கைகளுக்கு எதிராக தனியார் துறையிலுள்ள ஊழியர்களுக்கு மிகக் கூடுதலான சேவைப் பாதுகாப்பு அளிப்பதற்கான நகல் சட்டமொன்றை தொழில் சமூகசேவைகள் மந்திரி திரு. எம். பி. டி. ஸட். சிறிவர்தன தயாரித்துள்ளார்.

ஊழியர்கள்மீது முதலாளிமார் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக விரிவான விதிகள் இந்தநகல் மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஊழியர் ஒருவரை வேலையிலிருந்து நீக்குவதற்குமுன், சட்டரீதியான சில அடிப்படை முறைகளை முதலாளிமார் கடைப்பிடிக்க வேண்டும். முதலாளிமார் கடைப் பிடிக்கவேண்டிய அடிப்படை வழிவகைகள் இந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தன்மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச் சாட்டுகளிலிருந்து தன்னைப் பாதுகாக்கவும், குற்றச் சாட்டுக்கள் மீதான விசாரணையின்போது என்னமுறையில் தன் கட்சியை எடுத்து வாதாடுவதென்பதுபற்றிய தொழிலாளரின் உரிமைகளும் இந்த மசோதாவில் விளக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதாவினால் தொழிலாளர் முதலாளிமார் தகராறுகள் பெருமளவு குறைய வழிபிறக்குமென்று அரசாங்க வட்டாரங்கள் கருதுகின்றன.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 3-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 கே. இராமச்சந்திரா - பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'வாழ்க்கைத் திரை' - தொடர் நாடகம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-30 ஆனந்தா ராஜகோபாலன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 ஆனந்தா ராஜகோபாலன் –பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-45 ராகம், தானம், பல்லவி சித்தூர் சுப்ரமணிய பிள்ளை - பாட்டு, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகிலபாரத இலக்கிய நிகழ்ச்சி.

## ஆந்திராவில் சட்ட கமிஷன்

காளூல், ஆக. 2 ராஜ்யத்தின் சட்டங்களைப் பரிசீலனை செய்து மாற்றம் செய்வதுபற்றி சிபார்சு செய்வதற்காக சட்டக் கமிஷன் ஒன்றை ஆந்திர அரசாங்கம் நியமித்துள்ளது. அரசியல் திட்டத்துக்கு முரணான சட்டங்களையும் இக்கமிஷன் பரிசீலனை செய்யும். சென்னையின் மாஜி உயர்நீதியரசர் நாராயணராவ் தலைமையில் ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட இக்கமிஷனை ஆந்திர பிரதேச கவர்னர் நேற்று அழைத்துவைத்துப் பேசுகையில் காலநிலைக்குத் தகுந்த மாற்றங்களைச் செய்வதற்கு கமிஷன் சிபார்சு செய்ய வேண்டுமென்று கூறினர்.

மகத்தான 4 -வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

நவா (கொம்பனித்தெரு) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30மணிக்கும்

பி. சரோஜாதேவி, எஸ். எஸ். ராஜேந்திரன், தங்கவேலு நடித்த

மணப்பந்தல்

எல்லோரும் பார்த்து மகிழவேண்டிய ஓர் குடும்பச்சித்திரம்!

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்

ஜெமினி கணேசன் - பி. சரோஜாதேவி நடித்த

வாழவைத்த தெய்வம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

ராணி சினிமா (யாழ்ப்பாணம்) பி. ப. 2 மணி, மாலை 6-00மணி 9-45 மணிக்கும்

புரட்சி நடிகர் எம். ஜீ. ஆர்.
கன்னடத்துப்பைங்கிளி சரோஜாதேவி நடித்த

திருடாதே!

தென்னிந்தியாவிலும் மற்றும் பல இடங்களிலும் அதிவெற்றி வாகை சூடிக்கொண்டிருக்கும் மகோன்னத தயாரிப்பு!


# "உம்மைப் போன்றவர்கள் சமூகத்துக்கே அவமானம்"

## அரியாலை சிசுக் கொலை வழக்கில் நீதியரசர் அறிவுரை

யாழ்ப்பாணம், வியாழன்

"உம்மைப் போன்றவர்களால்சமூகத்துக்கேஅவமானம். திருமணம் புனிதமானதொரு பிணைப்பு என்பது உமக்குத் தெரியாது. உமது மனைவியின் வாழ்க்கையைச் சந்தோஷமாக்கச் சில திருத்தங்கள் செய்துகொள்வதற்கு இப்பவும் அதிக காலம் கடந்துவிடவில்லை" என்று நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா அரியாலை சிசுக் கொலை வழக்கில் எதிரியின் கணவனைப் பார்த்துக் கூறினர்.

டிசம்பர் மாதம் 6ம் திகதி தனது குழந்தையான ஒன்றரை வயது வசந்தகுமாரனைக் கொலை செய்ததாக மகிழேஸ்வரி என்றழைக்கப்படும் மார்க்கண்டுவின் மனைவி மகேஸ்வரிமீது குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் வழக்கை நடத்தினர். திரு. ஆர். விசுவநாதன், திரு.வி. நடராசா அனுசரணையுடன் திரு.ரி. கணேசலிங்கம் எதிரிதரப்பில் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்க தரப்பில் திரு. எஸ். நடராசா ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

காலஞ்சென்ற தம்பையாவின்மகன் தங்கராசா(வயது13) சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"என்னுடைய அம்மாவின் பெயர் நாகம்மா. தகப்பனர் காலமாகிவிட்டார். எதிரி என்னுடைய சகோதரி. அவருக்கு ஒன்றரை வயதான வசந்தகுமாரன் என்ற மகன் இருந்தான். சம்பவ தினத்தன்று காலை பத்து அல்லது பத்தரை மணியளவில் சுமார் 29 அடியளவு தூரத்திலிருந்து வசந்தகுமாரனின் அழுகைக் குரல் கேட்டது. அறைக் கதவு பூட்டப்பட்டிருந்தது. கதிரைக்குமேல் நின்று அறைக்குள் பார்த்தேன். எதிரி தலையை அசைப்பது தெரிந்தது. நான் ஐயோ என்று கத்தினேன். எனது மாமி ரூசம்மாவும், குழை வெட்டிக்கொண்டு நின்றவர்களும் ஓடி வந்து, உலக்கையால் அடித்துக் கதவைத் திறந்தார்கள். சுருக்குப்போட்டிருந்த கயிற்றை அறுத்துக் குழந்தையை வெளியில் கொண்டுவந்து தண்ணீர் தெளித்தோம். அக்கா தலையை ஆட்டியபடி இருந்தார். கழுத்தில் கயிறு சுருக்குப் போடப்பட்டிருந்தது. குழந்தையை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். குழந்தை இறந்தது. மார்க்கண்டு, எதிரியின் கணவர், குழந்தை பிறந்து ஐந்தாவது நாள் சண்டை போட்டுக்கொண்டு வீட்டை விட்டுப் போய்விட்டார்."

காலஞ்சென்ற தம்பையாவின் மனைவி, நாகம்மா (வயது 45) சாட்சியம் அளிக்கும்போது தெரிவித்ததாவது:-

"எதிரி என்னுடைய மகள். என்னுடைய மகளின் புருஷன் எப்போதும் குடிவெறியில் வீட்டுக்கு வந்து, மனைவியுடன் சண்டை போடுவார். எதிரி தன்னுடைய குழந்தையில் நேசமாக இருந்தார்."

நாகம்மா சாட்சியம் அளிக்கும்போது தொடர்ந்து கூறியதாவது:-

"எதிரிக்குக் கல்யாணம் ரிஜிஸ்டர் செய்திருந்தோம். சீதனம் கூட எழுத்தில் கொடுத்திருந்தோம். ஆறரைப் பரப்புக் காணியும், 2000ரூபாய்பெறுமதியான நகையும், 1000 ரூபாய் காசாகவும் கொடுத்தோம். மார்க்கண்டு 1000 ரூபாய் பணத்தைக் கொண்டு தாலியும், கூறையும் வேண்டினர். எதிரி ஒன்றும் சாப்பிடாமல் துக்கத்துடன் ஒரு மூலையில் இருப்பாள். மார்க்கண்டு அவளைக் கவனிப்பது கிடையாது. சீலை துணிகள் வேண்டிக் கொடுக்காமல், அவளுடைய நகைகள் எல்லாவற்றையும் விற்றுவிட்டார்."

இந்த நிலையில் எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம், குழந்தை பிறந்த பின்னர் ஏற்பட்ட வருத்தத்தினலும், குழப்பத்தினலுமே எதிரி கொலை செய்தாரென்றும், எதிரி குற்றவாளி என்று ஒப்புக் கொண்டும் எதிரி தரப்பில் மன்னிப்புக் கோரினர்.

ஜூரர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர்.

காங்கேசன்துறை பொலிஸ் ஸ்டேஷனில் கூலியாக வேலை செய்யும் மார்க்கண்டுவை கோர்ட்டில் ஆஜராக்கும் படி நீதியரசர் பிஸ்காலுக்கு உத்தரவு பிறப்பித்தார். இரண்டு மணிக்கு மார்க்கண்டு நீதியரசர் முன் கொண்டுவரப்பட்டார்.

நீதியரசர் எதிரியை 14-ந் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கும் படியும், அதே தினத்தன்று புரபேஷன் அதிகாரியைக் கோர்ட்டில் ஆஜராக்கும் படியும் உத்தரவு பிறப்பித்தார்.

எதிரியின் கணவன் மார்க்கண்டுவைப் பார்த்து நீதியரசர் கூறியதாவது:-

"இந்தப் பெண்ணை விவாகம் செய்து அவளுக்கு ஒருகுழந்தையும் பிறந்த பிறகு நீர் மிருகத்தனமாக நடத்திருக்கிறீர் என்று சாட்சியம்கூறுகிறது. நீர் குடிவெறியில் வந்து எதிரியை அவதூறு செய்திருக்கிறீர். அவளை இரண்டுமுறை தனியாக விட்டுச் செய்திருக்கிறீர். சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே நீர் வீட்டை விட்டு ஓடியிருக்கிறீர். கவலையான சூழ்நிலையில் இந்தப் பெண் தான் மிகவும் நேசித்து வந்த குழந்தையையும் கொலை செய்துவிட்டுத் தானும் தற்கொலை செய்த முயற்சித்திருக்கிறள். நடந்ததை மறந்து, அவளைத் திரும்பவும் ஏற்றுக்கொண்டு, குடும்பம் நடத்த விரும்புகிறயா?"

மார்க்கண்டு: குழந்தையைக் கொலை செய்த பெண்ணுடன் நான் எப்படி வாழ முடியும்.

நீதியரசர்: ஜீவனும்ச வழக்குத் தொடரப்பட்டால் நீ ஜீவனும்சம் கட்டவேண்டும். அவளைக் காப்பாற்றுவது உனது கடமை. அவள் இப்பொழுதும் உன்னுடையமனைவி. துக்கமான நிலையில் அவள் கொலை செய்தாள். உன்னைப் போன்ற ஒரு மனிதனைக் கல்யாணம் செய்தபடியால், அவள் தன் உயிரையும் மாய்த்துக்கொள்ள எண்ணினள்.

நீதியரசர்: உன்னுடைய சம்பளம் என்ன?

மார்க்கண்டு: காங்கேசன் துறைப் பொலிஸ் ஸ்டேஷனில் வேலை பார்க்கிறேன். சம்பளம் ரூபாய் 135.

நீதியரசர்: நீ உனது சம்பளத்தில் கொஞ்சம் உனது மனைவிக்கு ஒழுங்காகக் கொடுக்க வேண்டும். ஜீவனும்சம் கட்டும்படி தீர்த்தும் நீ கட்டாவிட்டால், மறியலுக்கும் போக வேண்டி நேரிடும். உன்னைப் போன்றவர்கள் சமூகத்துக்கே ஒரு அவமானம்.

# ஆடம்பரச் செலவுகளை குறைக்க வேண்டும்

## ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் மந்திரி பேச்சு

கொழும்பு, புதன்

நடுத்தரவகுப்பிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சினிமா பார்ப்பது போன்ற இதுபோன்ற ஆடம்பரச் செலவுகளிலிருந்தும் 50 வீதமான செலவைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென ஆசிரியர் தலைமைச் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:-

கடந்த வருடங்களைப்போலல்லாது இப்பொழுது மக்கள் தொடர்ந்து நலமடைவதற்கான வழிவகைகளை நாம் எடுத்து வருகிறோம். எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டிய சமயம் இப்பொழுதுதான். ஒவ்வொருவரும் கஷ்டத்தைப் பகிர்ந்து அனுபவிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். பிறருக்கு உதவி செய்து பொதுவாக நாட்டின் நலனையும் மக்களுடைய நலனையும் பேணி உழைக்கும் மனப்பான்மையை நாம் வளர்க்க வேண்டும்."

### தேசியவங்கியின் தலைவர் எச். வி. பெரேரா

இலங்கை வங்கி தேசியமயமாக்கப்பட்டதும் திரு. எச். வி. பெரேரா கியு. ஸி. வங்கி அதிகார சபையின் தலைவராகக் கடமையாற்ற அழைக்கப்படுவாரெனத் தெரிகிறது.

திரு. பெரேரா, இலங்கை வங்கி அதிகாரசபையின் தலைவராக நீண்டகாலம் பதவி வகித்து வந்துள்ளார்.

இலங்கை வங்கி தேசியமயமாக்கப்பட்டதும் வங்கி அதிகார சபையில் திறைசேரி தலைவரும் காரியதரிசியும் உட்பட ஆறுபேர் அங்கத்துவம் வகிப்பர்.

நிதிமந்திரியால் நியமிக்கப்படும் உத்தியோகப் பற்றற்ற 5 டைரக்டர்களும் இலங்கை தேசிய வங்கியில் கடமையாற்றுபவர்கள். இவர்கள் ஆரம்ப காலச் சேவையாக மூன்று வருடங்கள் கடமையாற்றுவார்கள். பார்லிமெண்டிலே சமர்ப்பிக்கப்பட இருக்கும் புதிய மசோதாவின் படி வங்கிகள் யாவும் தேசியமயமாக்கப்பட்டால் மூன்று வருடங்களுக்குப் பின்னும் பணியாற்ற இவர்களுக்கு உரிமை வழங்கப்படும்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.